රාජ්‍ය දැව සංස්ථාව
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
STATE TIMBER CORPORATION

# 2023

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT

පාරිභෝගික විශ්වාසය දිනාගත් දැව කර්මාන්තයේ සැබෑ නායකත්වය
நுகர்வோரின் நம்பிக்கையை வென்ற அரிமரக் கைத்தொழிலில் உண்மையான தலைமைத்துவம்
REAL LEADERSHIP OF THE TIMBER INDUSTRY THAT WON CONSUMBER TRUST

වනජීවී හා වනසම්පත් සංරක්ෂණ අමාත්‍යාංශය
வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF WILDLIFE AND FOREST RESOURCES CONSERVATION



அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை 2023

அரிமரச் சந்தையில் உண்மையான
தலைமைத்துவத்தை நோக்கி

# 1968 - 2023

55 வருட முடிவுறாத பயணத்தைத் தொடரும்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

மக்களின் மனதை வென்ற
நிறுவனமொன்றாக முன்நோக்கி

## நோக்கு

தேசத்தின் நம்பிக்கையை வென்ற தரம்மிக்க அரிமரம் மற்றும் மரத்திலான உற்பத்திகளை வழங்குபவராகவும் மரப் பலகைச் சந்தையில் தலைவராகத் திகழ்தல்.

## செயற்பணி

எம்மிடமுள்ள தொழில்நுட்ப அறிவு, நன்மதிப்பு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி சட்ட ரீதியான, சுற்றாடலுக்கு சாதகமான வகையில் தேசிய தேவைப்பாட்டின் பிரகாரம் எமது வாடிக்கையாளர்களின் அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களுக்கான கேள்விக்கு உற்பத்தி செய்து வழங்கல்

# சிறந்த அரிமரத் தயாரிப்பு

அரச மரக் கூட்டுத்தாபனம் அரசுக்குச் சொந்தமான ஓர் வணிக நிறுவனமாகும். அது 1968.04.04 ஆந் திகதிய 1979/6 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் காணி, நீர்ப்பாசனம் மற்றும் மின்சார கௌரவ அமைச்சரினால் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டதுடன், 1969 நவம்பர் 7 ஆந் திகதிய 14879 ஆம் இலக்க வர்த்தமானி, 1982 பெப்ரவரி 05 ஆம் திகதிய 178/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், 2001 ஆம் ஆண்டின் ஜூன் 26 ஆம் திகதிய 1190/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2008 பெப்ரவரி 25 ஆம் திகதிய 1538/7 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் மேலும் நாளதுவரையாக்கப்பட்டது. ஈடுபடுத்தப்பட்ட ஆரம்ப மூலதனம் ஷரூபா 2.5 மில்லியனாகும். 55 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் மற்றும் பழக்கம் கூடிய நிறுவனமொன்றாக அரச மரக் கூட்டுத்தாபனம் உயர் தரத்திலான தளபாடங்கள் தேவையுள்ள ஹோட்டல் உரிமையாளர்களினதும், அரச நிறுவனங்களினதும், தளபாட வடிவமைப்பாளர்களினதும் உட்பட தனியார் கொள்வனவாளர்களினதும் முன்னணித் தெரிவாகக் காணப்படுகின்றது

அரச மரக் கூட்டுத்தாபனம் மிக உயர்ந்த தரம் வாய்ந்த உயர்தர மரத்தினாலான தயாரிப்புக்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கும் அதிகபட்ச சேவையை வழங்குவதற்கும் முடிந்தவரை முயற்சி செய்கின்றன. அழகான வீடுகள், ஆடம்பரமான ஹோட்டல்கள், நிர்வாக அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டு வாசஸ்தலங்கள் என்பவற்றிற்கு எமது விலைமதிப்பற்ற மர உற்பத்திகள் அதிக பெறுமதியைச் சேர்க்கின்றது. நன்றாக நிர்வகிக்கப்படுகின்ற தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட பெறுமதியான மரத்தினால் செய்யப்பட்ட சிறப்புகள் அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்கான மரத்தினாலான பொருட்கள், மரத் தளபாடங்கள் மற்றும் மரத்துண்டங்கள் மற்றும் கிழிக்கப்பட்ட பலகைகள் உற்பத்தி செய்து வழங்குவதினூடாக வாடிக்கையாளரின் உயர் திருப்தியை எதிர்பார்க்கின்றது. அரச மரக் கூட்டுத்தாபனம் புகழ் பெற்ற ஓர் அரச நிறுவனமாக விளங்குவதுடன் பரவலான உயர்தர மற்றும் நீண்ட கால மரப் பொருட்களை சந்தைக்கு வழங்குவதுடன், தயாரிப்புக்கள் அதி நவீன தொழிநுட்பத்துடன் அதி நவீன இயந்திரங்களுடன் கூடிய நவீன வேலைச் சூழலில் உற்பத்திகள் தயாரிக்கப்படுகின்றன.

மனதைக் கவரும் சிறு இருக்கை முதல் தனித்துவமான படுக்கையறைத் தொகுதி வரை வாடிக்கையாளரால் கோரப்பட்ட விலைக்கும் உரிய காலப்பகுதியிலும் உயர் தரத்துடன் கூடிய தயாரிப்புக்களை உற்பத்தி செய்து வழங்கும் இயலுமை அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றது. எமது உற்பத்திகளின் தரம் எம்மால் உற்பத்திச் செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன.

- எங்கள் தயாரிப்புகளுக்கு நிலைபேறான முறையில் நிர்வகிக்கப்படும் காடுகளிலிருந்து பெறப்பட்ட முதிர்ந்த மரங்கள் பயன்படுத்தப்படும்.
- இளைய மற்றும் குறைபாடு இல்லாத உயர் தர மரங்களைப் பயன்படுத்துதல்.
- நன்கு பயன்படுத்தப்பட்ட மரத்தின் பயன்பாடு
- நவீன உற்பத்திச் செயன்முறைகளுக்கு இயந்திரங்களின் பயன்பாடு
- தரம் மற்றும் பிற சான்றழிக்கப்பட்ட மரம் அல்லாத மூலப் பொருட்களின் பயன்பாடு
- நவீன பொருத்துதல் மற்றும் முடிக்கும் நுட்பங்களைப் பயன்படுத்தல்

உற்பத்திகளின் தரம் தவிர கூட்டுத்தாபனத்தில் நிறைவேற்றப்படுகின்ற அனைத்து வகையான தளபாடத் தேவைகளுக்காக இலவச மதிப்பீட்டுச் சேவைகள் மற்றும் அளவிடல் சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும், எங்கள் சொந்த விவரக் குறிப்புகளுக்கு அமைய அதிக வருமானத்துடன் தயாரிக்கப்படுவதுடன் பெறப்பட்ட உயர்தர தளபாடங்களுடன் சந்தைக்கு வழங்க நாங்கள் உத்தரவாதம் அளிக்கின்றோம். எங்கள் தயாரிப்பு முறைகளை விரிவாக்கவும், தொடர்ந்து தரமான சேவையை வழங்கவும் சிறந்த வாடிக்கையாளர் சேவைச் சூழலை மேம்படுத்தவும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

# எமது பணிகள்



வீடுகள்
மற்றும் சேவை
நிலையங்களை
நிர்மாணிப்பதற்காக
நிலைபேறான
மூலப்பொருட்கள்
வழங்கப்படும்



நிலைபேறான வன
முகாமைத்துவ
தந்திரோபாயங்கள்
பயன்படுத்தப்பட்டு
சுற்றாடலைப்
பாதுகாப்பதற்கும்
அதிகரிப்பதற்குப்
பங்களிக்கிறது



விரிவான விலகல்
பரவும் நவீன
மற்றும் சம்பிரதாய
தளபாடங்கள்
வழங்கப்படுகின்றன



நிதி அடிப்படையில்
உறுதியான
நிறுவனமொன்றாக
நீண்ட காலம்
வாடிக்கையாளர்களுக்கு
பொருட்கள் மற்றும்
சேவைகளை வழங்குதல்



வருமான
வரி மற்றும்
திறைசேறிக்கு வரி
செலுத்தி சமூக
அபிவிருத்திக்காகப்
பங்களிப்புச்
செய்தல்





# பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| நிதிக் கூற்று விசேட தரவுகள் | 94 |
| நிறுவனத் தகவல்கள் | 95 |
| முகாமைத்துவக் குழு | 96 |
| தலைவரின் மீளாய்வு | 99 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 102 |
| எமது பொறுப்புக்கள் மற்றும் எமது வர்த்தகப் பெறுமானங்கள் | 107-108 |
| பணிப்பாளர் சபை | 109 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 110 |
| பணிப்பாளர் சபை மீளாய்வு | 111 |
| எமது உள்ளடக்க வலயங்கள் | 116 |
| நிறுவன நிர்வாகம் | 117 |
| கணக்காய்வு குழு அறிக்கை | 120 |
| இடர் முகாமைத்துவம் | 122 |
| நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு | 127 |
| வியாபாரப் பொழிப்பு | 138 |
| தசாப்தத்தின் தகவல்கள் | 141 |
| கணக்காய்வாளர் நாயக அறிக்கை | 142 |
| வருடாந்தக் கணக்குகள் | 149 |
| நிதிக் கலைச் சொற்கள் | 173 |

# நிதிசார் முக்கிய பதிவுகள்

| டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கானது | 2023 Rs. '000 | 2022 Rs. '000 | வித்தியாசம் % |
|---|---|---|---|
| **வருமானம் ஈட்டல் தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்** | | | |
| விற்பனைப் புரள்வு | 4,092,128 | 4,743,049 | -14% |
| வருமான வரிகளுக்கு முன்னர் இலாபம் | 1,273,734 | 1,015,986 | 25% |
| திறைசேரிக்கு செலுத்திய வரி | 649,461 | 320,000 | 103% |
| வருமான வரி | 117,943 | 380,105 | -69% |
| வருமான வரிகளுக்கு பின்னர் இலாபம் | 1,155,791 | 635,881 | 82% |
| உரிமைப்பங்கு மீதான ஈட்டல்கள் | 14.4% | 8.3% | 74% |
| சொத்துக்கள் மீதான ஈட்டல்கள் | 12.1% | 6.6% | 82% |
| **ஐந்தொகை முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்** | | | |
| மொத்த சொத்துக்கள் | 9,562,930 | 9,588,286 | 0% |
| மொத்த உரிமைப்பங்கு | 8,006,788 | 7,665,155 | 4% |
| மொத்த படுகடன்கள் | 1,556,142 | 1,923,131 | -19% |
| கடன்/ உரிமைப்பங்குகள் | 19% | 25% | -23% |
| கடன்/மொத்த சொத்துக்கள் | 16% | 20% | -19% |
| **ஏனைய தகவல்கள்** | | | |
| மொத்த ஊழியர்கள் (எண்ணிக்கை) | 1,390 | 1,500 | -7% |
| ஊழியர் ஒருவரின் வருமானம் | 2,943.98 | 3,162.03 | -7% |
| ஊழியர் ஒருவரின் வருவாய்இலாபம் (வரிகளுக்கு முன்னர்) | 916.36 | 677.32 | 35% |






# நிறுவனத் தகவல்கள் – 2023.12.31

| | | |
|---|---|---|
| கௌரவ திருமதி பவித்ரா வன்னிஆரச்சி அவர்கள் | - | வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் |
| திருமதி. ஆர். எம். சீ. எம். ஹேரத் அவர்கள் | - | செயலாளர், வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு |

### பணிப்பாளர் சபை

| | | |
|---|---|---|
| திரு. பீ. எஸ். குணரத்ன | - | தலைவர் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு. ஈ. ஏ. பீ. என். எதிரிசிங்ஹ | - | பணிப்பாளர் - வன பாதுகாவலர் நாயகம் |
| திரு. எச். பீ.கே. பெரேரா | - | பணிப்பாளர் - திறைசேரி பிரதிநிதி |
| திரு. சீ. விக்கிரமரத்ன | - | பணிப்பாளர் |
| திரு. சந்தன பெரேரா | - | பணிப்பாளர் |
| திரு.கே. ஏ. டீ. எஸ். சீ.கே. கதுருசிங்ஹ | - | பணிப்பாளர் |
| திரு. ஈ. ஆர. குலதுங்க | - | பணிப்பாளர் |
| திருமதி. தர்‘னீ சமரவிக்கிரம | - | பணிப்பாளர் சபை செயலாளர் |

### கணக்காய்வுக் குழு

| | | |
|---|---|---|
| திரு. எச். பீ.கே. பெரேரா | - | குழுத் தலைவர் |
| திரு. சந்தன பெரேரா | - | குழு உறுப்பினர் |
| திரு. சமிந்த விக்கிரமரத்ன | - | குழு உறுப்பினர் |

### கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் நாயகம்

தேசிய கணக்காய்வு அலுவலகம்

306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை

### பிரதான வங்கியாளர்

இலங்கை வங்கி

### நிதியாண்டு

ஜனவரி 1 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை

தொலைபேசி : 94112866600-5

தொலைநகல் : 94112866623

இணையத்தளம் : www.timco.lk

# முகாமைத்துவக் குழு – 2023

| | | |
|---|---|---|
| பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி | கலாநிதி நிமல் ருவன்பதிரண | Ph.D., M.Sc (Foresty), B.Sc(Bio.Sc), B.A.F.(Forest Mgt-Germany), M.I.Bio.(SL) |

## பிரதி பொதுமுகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பிரதி பொதுமுகாமையாளர் (நிதி) | திரு. ஜீ. டீ. எஸ். குமாரசிங்ஹ | MBA, B.Sc. (Acc.Fin.Mgt), FCA, ACCA, ACMA |
| பிரதி பொதுமுகாமையாளர் (மனித வள மற்றும் நிர்வாகம்) | திரு. எம். ஏ. சீ. என். சமரசிங்ஹ | MPM, B.Sc (Business studies) Ad.Dip in Mgt. and Admin. |
| பிரதி பொதுமுகாமையாளர் (செயற்பாடு) பதில் | திரு. ஜீ. ஜீ. திசர. கமகே | MBS, B.Sc (Physical Science) |
| பிரதி பொதுமுகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | திரு. டப்ளியூ. பீ. சமந்த | MBM, M.Sc (Forestry), B.Sc, N. Dip. Teaching |
| பிரதி பொதுமுகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி) (பதில்) | திரு. ஜீ. ஜீ. திசர. கமகே | MBS, B.Sc (Physical Science) |
| பிரதி பொதுமுகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) (பதில்) | திரு. எச். எம். எஸ். மாதவ | MCPM, PGD(com), B.com(Sp) Dip in Internal Auditing |
| உதவி பொதுமுகாமையாளர் (வலய) | திரு. பீ.கே. அஜித் சந்தன | B.Sc (Hon.), MBS, HRM.Dip |
| உதவி பொதுமுகாமையாளர் (வலய) | திரு. எச் பீ. ரஜவத்த | BA, MBS. |
| பிரதி பொதுமுகாமையாளர் (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் அபிவிருத்தி) | கலாநிதி திரு. சீ.கே. முதுமால | PhD in Agricultural Engineering M.Sc. (Forestry), B.Sc (Agri.) Hon., Dip. in English |

## முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| முகாமையாளர் (நிதி) | திருமதி. பீ. டீ. என். போவத்த | |
| முகாமையாளர் (இயந்திரப் பொறியியல்) | திரு. ஏ.கே. லசித்த எட்மன்ட் | B.Sc. (Engineering) |
| முகாமையாளர் (கொள்வனவு மற்றும் கடல்) | திரு. எச். எம். பீ. பீ.ஹேரத் | HNDA, FM(ABE)UK, PGD. Fin. MBA(UK) |
| முகாமையாளர் (தகவல் தொழிநுட்பம்) (பதில்) | திரு.ஜே. எம். எம். பீ. ஜயசுந்தர | B.Sc. (sp) Hon. |
| முகாமையாளர் (பாதுகாப்பு) | திரு. சீ. வீரமன் | |
| முகாமையாளர் (சிலிப்பர்கள் மற்றும் மின்கம்பங்கள்) | திரு. டீ. எம். என். புஷ்பகுமார நில்மினி | B.Sc (N.S) |
| முகாமையாளர் (நிதி) (பதில்) | திரு. யூ. எஸ். மடவல | HNDA, MAAT |

## பிராந்திய முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பிராந்திய முகாமையாளர் (பண்டாரவளை) | திரு. டீ. எச். ராஜபக்ஷ | M.Sc (Forestry) , B.Sc |
| பிராந்திய முகாமையாளர் (மாத்தறை) | திரு. டப்ளியூ. ஐ. சாரங்க | B.Sc (Hon) |
| பிராந்திய முகாமையாளர் (தலைமை அலுவலகம்) | திரு. ஆர். விஜேதுங்க | B.Sc(Agri.)Sp |
| பிராந்திய முகாமையாளர் (பி. அ) | திரு. எச்.பீ. எஸ். திஸாநாயக்க | BA |
| பிராந்திய முகாமையாளர் (குருனாகல்) | திரு. யூ. எஸ். எம். பிரனாந்து | BA (Sp), MBS |
| பிராந்திய முகாமையாளர் (அம்பாறை) | திரு. யூ. பீ. எச். உலுவடுகே | B.Sc |
| பிராந்திய முகாமையாளர் (கொழும்பு) | திரு. எம். டீ. சீ. சம்பத் | BA |
| பிராந்திய முகாமையாளர் (இரத்தினபுரி) | திரு. எச். எல். நந்தன | B.Sc, MBS. |
| பிராந்திய முகாமையாளர் (கண்டி) (பதில்) | திரு. டீ. ஏ.ஹெந்தாவிதாரண | Dip (Forest Technology) NVQ 05, MBS. |
| பிராந்திய முகாமையாளர் (நுவரெலியா) (பதில்) | திரு. சுனில் ஜயரத்ன | |
| பிராந்திய முகாமையாளர் (அனுராதபுரம்) (பதில்) | திரு. டீ. எல். அபேநாயக்க | |
| பிராந்திய முகாமையாளர் (யாழ்ப்பாணம்) (பதில்) | திரு. எம். டப். டப். பீ. முதன்நாயக | BA |

## பிரதி முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| முகாமையாளர் (சட்டம்) | திருமதி.கே. ஐ. டீ. பீ காரியவசம் | LLB, Attorney at Law |
| பிராந்திய முகாமையாளர் (தளபாட வடிவமைப்பு மற்றும் தரப் பாதுகாப்பு) கல்தெமுல்லை | திரு. ஈ. எம். எம்.பிரனாந்து | |
| தொகுதிப் பகுப்பாய்வாளர் | திரு. டப்ளியூ. எச். ஏ. சந்திரகுமார | B.Sc |
| பிரதி முகாமையாளர் (நிதி) பூஸ்ஸ | திருமதி. ஏ. எல். துஷாரி.டி. சில்வா | HNDA, MAAT |
| பிரதி முகாமையாளர் (நிதி) நுவரெலியா | திரு. என். டி. எஸ்.கே. பீ. திலகவர்தன | HNDA, MAAT |
| பிரதி முகாமையாளர் (நிதி) (கண்டி) | திரு. டப்ளியூ. எம். ஜீ. எம். விஜேசிங்ஹ | B.Sc(Busi.Admin), MAAT |
| பிரதி முகாமையாளர் (நிதி) (மாத்தறை) | திரு. ஏ. ஜே.புஷ்பகுமார | B.Sc (Bus.Admin) MA |
| பிரதி முகாமையாளர் (நிதி) (மின்னேரியா) | திருமதி . எம். டீ. பீ. எம். திஸாநாயக்க | B.Sc (Acc), MBS |
| பிரதி முகாமையாளர் (நிதி) பிராதன அலுவலகம் | திருமதி. எஸ். விதானகே | |
| பிரதி முகாமையாளர் (நிதி) (அனுராதபுரம்) | திரு. டப்ளியூ.கே. ஜயசிங்ஹ | |
| பிரதி முகாமையாளர் (நிதி) (கொழும்பு) | திரு. திரு. எஸ். பீ. ஏ.ஜே. சீ. சமரகோன் | B.Sc (Finance) Sp |
| பிரதி முகாமையாளர் (நிதி) பி. அ | திரு. எஸ். எம்.ஹேவகே | B.Sc, Bus.Admin. (Bus.Econ. sp), MBS |
| பிரதி முகாமையாளர் (நிதி) (குருனாகல்) | திரு. திரு. எஸ். எச். ஐ. பிரசாத் | B.Sc, Bus.Admin. (Bus.Econ. sp),MBS |

| | | |
|---|---|---|
| பிரதி முகாமையாளர் (நிதி) பி. அ | திரு. டி.கே. ஜீ. ஜீ. புஷ்பகுமார | B.Com., MBA, MAAT, PGD. Acc. & Fin. |
| பிரதி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | திரு. டப்ளியூ. டி. ஏ. எஸ். திலகரத்ன | |
| பிரதி முகாமையாளர் (அரிமரத் தரப்படுத்தல் மற்றும் ஏல விற்பனை) | திரு. டி. பீ.கே. எஸ். ஜீ. சமரவிக்ரம | B.Sc (Mkt.Mgt) |
| பிரதி முகாமையாளர் (அரிமர வழங்கல்) | திரு. பீ. ஏ. நலின் தேசப்பிரிய | |
| பிரதி முகாமையாளர் (தளபாட வடிவமைப்பு) | திருமதி. எச். எம். டீ. எஸ். அபேரத்ன | MBA, B. Design (Hon), |
| பிரதி முகாமையாளர் (அரிமர ஆலை) | திரு. எம். பீ. என். அருன சாந்த | B.Sc (Bus.Admin) |
| பிரதி முகாமையாளர் (விசாரணை) | திரு. எஸ். ஏ. டீ. நிரோஷன் | B.Sc (Bus.Mgt) |
| பிரதி முகாமையாளர் (இயந்திரப் பொறியியலாளர்) - கல்தெமுல்லை | திரு. எம்.கே. எம். அக்தார் | B.Tech |
| பிரதி முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு) | திரு. டப்ளியூ. எம். ஐ. எச். வீரசூரிய | B.Sc |
| பிரதி முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு) - பூஸ்ஸ | திரு. எச். எம். எல். ஈ. ஜீ. ஹேரத் | B.Sc |
| பிரதி முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு) அம்பாறை | திரு. டப்ளியூ. எம். ஐ. எச். வீரசூரிய | B.Sc |
| பிரதி முகாமையாளர் (உற்பத்தி) பி. அ | திரு. ஐ. எம். ஐ. எஸ்.கே. விக்கிரமசிங்ஹ | PgD (Fin, & Mathematics), B.Sc |

## தளபாடத் தொகுதி முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பிரதி முகாமையாளர் - கல்தெமுல்ல | திரு. எச். எம். யூ. பீ. சோமவீர | BLE, Dip IT & Mgt |
| பிரதி முகாமையாளர் (தளபாடத் தொகுதி) அம்பாறை | திரு. ஆர். எஸ். பல்லியகே | B.Sc (Bus.Admin) |
| பிரதி முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு) - பூஸ்ஸ | திரு.எச். எம். எல்.ஈ. குணசேகர ஹேரத் | B.Sc |

## பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பி. பி. மு. (கண்டி) | திரு. டப்ளியூ. ஏ. எஸ். விஜேசேகர | |
| பி. பி. மு. (மின்னேரியா) | திரு.கே. எம். பீ. டீ. சீ. கபிலரத்ன | |
| பி. பி. மு. (அம்பாறை) | திரு. யூ.ஜே. ஜீ. ஏக்கநாயக்க | |
| பி. பி. மு. (பண்டாரவளை) | திரு. ஆர். சீ. சமன் குமார | |
| பி. பி. மு. (மொனராகலை) | திரு. எஸ்.சீ. ஜயமான்ன | B.Sc |
| பி. பி. மு. (மாத்தறை) | திரு.கே. சந்திரசேன | |
| பி. பி. மு. (கொழும்பு) | திரு. எஸ். பீ. உடகெதர | BA |
| பி. பி. மு. (மாத்தறை) | திரு. பீ.ஹெட்டிஆரச்சி | B.Sc |
| பி. பி. மு. (இரத்தினபுரி) | திரு. எஸ். ஏ. மனோஜ் துஷார | |
| பி. பி. மு. (குருனாகல்) | திரு. ஆர். பி. பி. டீ. ஜயசிங்ஹ | |
| பி. பி. மு. (அனுராதபுரம்) | திரு. எஸ். எம். எஸ். சிரிவர்தன | |
| பி. பி. மு. (மாத்தறை) பதில் | திரு. எச். ஆர்.எம். எஸ். குணசேகர | |



# தலைவரின் மீளாய்வு

**பீ. எஸ். குணரத்ன**
**தலைவர்**

வியாபாரத் துறைக்கு மோசமானதாகத் தாக்கிய மோசமான பொருளாதார மற்றும் அரசியல் சூழலொன்றின் மத்தியிலும் சிறப்பானதொரு செயலாற்றுகையொன்றைப் பதிவு செய்து 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றினை உங்களிடம் பெரும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன். கூட்டுத்தாபனத்தின் தளராத அர்ப்பணிப்பு மற்றும் தாங்கும் திறன் காரணமாக முன்னர் ஏற்படாத சவால்களைச் சந்தித்தாலும் நிதி ஸ்திரத்தன்மை செயற்பாட்டு சிறப்பினை தொடர்ச்சியாகக் காட்டியது.

2023 டிசம்பர் 31 திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டிற்காக ஆண்டு முழுவதும் எம்மால் எடுக்கப்பட்ட செயன்முறைகள் காரணமாக, கூட்டுத்தாபனத்தின் வருமானம் ரூ. 4,092,128,811.00 மற்றும் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ.506,329,836.00 ஆக கவனிக்கப்பட வேண்டிய வருமானம் மற்றும் இலாப பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாவதனை கவனிக்கத்தக்கது. மேலும், பொருளாதார மற்றும் நிதிச் சவால்களின் மத்தியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வியாபார நடவடிக்கைகளும் தளராது நடந்தன. அண்மைக்கால பொருளாதார நெருக்கடி நிலைமையினால் நாடு சந்தித்த மோசமான நிலைமைக்கு முகம்கொடுப்பதற்கும் ஏற்பட்டது. அந்நியச் செலாவணி இருப்பு வேகமாகக் குறைவடைதல், பணத்தின் பெறுமதி குறைவடைதல், உயர் பணவீக்கம் மற்றும் உயர் வட்டி வீதம் காரணமாக வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களை மீண்டும் செலுத்துவதற்கு சிரமப்படுதல் போன்ற சவால்கள் எமது நிறுவனத்தினையும் கடுமையாகப் பாதித்தது.

மனித வளம் எமது கூட்டுத்தாபனத்திடமுள்ள மிகப் பெறுமதி வாய்ந்த சொத்து என்பது நம்பிக்கையாகும். 2023 ஆம் ஆண்டினுள், கூட்டுத்தாபனத்தின் இலக்குகளை அடைந்து கொண்டு எமது வாடிக்கையாளர்களுக்கு முடிந்தவாறு உயர் மட்டத்தில் சேவையை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ள பணியாளர்களின் திறமைகளையும் நிபுணத்துவத்தையும் விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்ட பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை எமது

பணிக்குழுவினருக்காக தொடர்ச்சியாக நடாத்தினோம்.

**நிதிச் செயலாற்றுகை**

2023 ஆம் ஆண்டில் பொருளாதார மந்தநிலையின் கீழும் வருடாந்த நிதியாண்டில் ரூ. 4,092 மில்லியனான வருமானத்தைப் பதிவு செய்ததோடு, 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 4,743 மில்லியனுக்கு ஒப்பீட்டளவில் 14% ஆன குறைவொன்று ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எவ்வாறாயினும், இக்கீழிறங்கியதன் கீழும், வரிக்கு முன்னரான இலாபம் ரூ. மில்லியன் 1,273 உம் 2023 ஆண்டில் வரிக்கு பின்னரான இலாபம் ரூ. மில்லியன் 506 வுமாக பதிவு செய்யப்பட்டது.

வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்கு பின்னரான இலாபம் 2022 ஆண்டிற்கு ஒப்பீட்டளவில் முறையே 25% மற்றும் 60% இனால் அதிகரித்துள்ளது. மேலும் அரச நிறுவனமொன்றாக நாம் இக்காலப்பகுதியில் ரூ. மில்லியன் 649 இனை அரச திறைசேரிக்கு வழங்கியுள்ளதோடு, அதனை நாம் பெருமையுடன் பதிவு செய்தோம்.




அவ்வாறே, வரிகளுக்கு முன்னரான கூட்டுத்தாபனத்தின் சாதாரண சொத்து இலாப வீதம் (ROA) 2022 ஆண்டில் 6.6% இலிருந்து 2023 ஆண்டில் 12% வரை உயர்வடைந்துள்ளது. வரிகளுக்குப் பின்னர் சாதாரண பங்கிலாப வருமான வீதம் (ROE) 2022 ஆண்டில் 9% இலிருந்து 2023 ஆண்டில் 15% வரை உயர்வடைந்துள்ளதோடு, இப்பெறுமதிகளின் மூலம் காட்டப்படுவது அனைத்து சொத்துக்களும் பங்குகளும் வருமானத்துக்கு பாரிய பங்களிப்பொன்றை வழங்கின என்பதாகும். அதனால், நிறுவனம் சரியான கடமைப்பொறுப்பு நிதி முகாமைத்துவக் கொள்கையொன்றை நடத்திச் செல்லப்படுகின்றது என்பதனைக் காட்டுகின்றது




**எதிர்கால நடவடிக்கைகள்**

இலங்கையில் குறுகிய மற்றும் மத்திய கால எதிர்காலம் நிலையற்றதாகி விடும் என்பதனைக் காட்டுகின்றதோடு, நீண்ட கால ஸ்திரத்தன்மைக்காக காரிய அரசியல் சூழலொன்றையும் சர்வதேச நிதி நிதியத்தின் உதவியுடன் கடன் மறுசீரமைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். அதனால், எதிர்காலம் பற்றிய நான் நேர்மையாக வெற்றிகரமானதாக அமையும் என்ற நோக்குடன் கவனித்துப் பார்ப்பதோடு, புதிய அரசியல் கலாசாரமொன்றையும் உறுதியான பொருளாதார முகாமைத்துவ வழிகாட்டல்களையும் நடத்திச் செல்வது இலங்கையில் நீண்டகால அபிவிருத்திக்கு சிறந்த ஒரு படியென நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது வியாபார தன்மையின் பிரகாரம், மேலும் நிலையானதாக பாதுகாப்பானதாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நான் நம்புகின்றேன். எமது உறுதியான அமைப்பு ரீதியான திறனொன்றினால் அதிக விரிவாக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பமொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு, நாம் முகம்கொடுகின்ற போட்டிகரமான சவால்களைப் பற்றிய சரியான கவனத்துடன் இருப்பதனால் அதற்கான புதிய அபிவிருத்தி மூலதன நடவடிக்கையினை எடுப்போம்.

சவாலான புதிய வருடமொன்றுக்கு, உபாய வழித் திட்டங்களைத் தயாரித்து, அத்திட்டங்களைச் செயற்படுத்தி, இடையில் அதனை மீளாய்வு

செய்து, புதிய திட்டங்களைத் தயாரித்து, மிக உறுதியான அடிப்படைகளின் கீழ், வியாபார சவால்களைச் சந்தித்தாலும், பயணிம் செய்ய முடியும் என நாம் நம்புகின்றோம்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு ஆயத்தமாக இருப்பதோடு, எமது வியாபாரத்தை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களைத் தேடிக் கொள்வதற்கு முடியுமாக உள்ளது என்பதனை நான் நம்புகின்றேன். அவ்வாறே, எமது வியாபார நற்பெயரை மேலும் விரிவாக்கிக் கொள்வதற்கும் எமது ஏனைய உரிய காரணிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

நாம் எமது மதிப்பினை அதிகரித்து உற்சாகமடைவதன் மூலம் எமது செயலாற்றுகையை கட்டியெழுப்புவதற்காகச் செயற்பட்டு, பாதுகாப்பினைத் தக்கவைத்துக் கொண்டு முன்னே செல்கின்றோம். அவ்வாறே, தற்கால அரசாங்கத்தினால் கிடைக்கின்ற அனுசரணைகளை நாம் உள்நாட்டு உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு உற்சாகத்துடன் செயற்படுகின்றோம்.

**நன்றி நவிலல்**

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் அவர்களுக்கும், இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கும், செயலாளர்கள் மற்றும் அமைச்சின் பணிக்குழுவினர், வன பாதுகாவலர் நாயகம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் பணிக்குழுவினர் மற்றும் ஏனைய அனைத்து அரச அதிகாரிகளும் எமக்கு வழங்கிய பாரிய ஒத்துழைப்பு பற்றிய நான் பெரும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர் மற்றும் அனைத்து பணிக்குழு உறுப்பினர்களுக்கும் அவர்களின் அறிவு மற்றும் திறனுக்காக, விசேடமாக அவர்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்காக விசேட நன்றியைத் தெரிவிக்கிறேன். 2024 ஆண்டானது இலகுவானதாக அமையாது இன்பதனை நாம் எதிர்பார்க்கவில்லை எனினும், நாம் குறுகிய கால சவால்களைப் பொருட்படுத்தாது நீண்ட கால நோக்கங்களின் பின்னால் சென்று, முடிந்தவரை சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதற்காக ஈடுபடுவோம். எமது இலக்குகளை அடைந்து கொண்டு, எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பிரதிபலன்களை வழங்குவதற்கு நாம் செயற்படுவோம். எமது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஒத்துழைப்பினை வழங்கிய எமது அனைத்து வாடிக்கையாளர்களைப் போன்றே, எமது அனைத்து தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரச் சந்தையில் உயர் மட்டத்தில் வியாபாரியொருவராக திகழும் என்பதனை நான் உறுதியாக நம்புவதோடு, இறுதியாக நான் சகல தரப்பினரினதும் ஒத்துழைப்பினை மேலும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்காக எதிர்பார்க்கின்றேன்.



**பீ. எஸ். குணரத்ன**
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



# பொது முகாமையாளரின் மீளாய்வு

**கலாநிதி என்.டீ. ருவண்பதிரண**
**பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு 55 வருடங்கள் பூர்த்தியடையும் 2023 ஆம் ஆண்டிலும் நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையைச் சந்தித்தாலும் நிலவிய சிக்கலகளைச் சமாளித்து, மீளாய்வாண்டினுள் அரிமர வழங்கல்களை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்காக சவால்கள் பலவற்றுக்கு முகம்கொடுப்பதற்கு ஏற்பட்டதெனினும், நிலவிய அரிமரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எமது உயர்ந்தபட்ச பலத்தைக் குறையாது வழங்கி, அர்ப்பணிப்புடன் எமது இலக்குகளைக் கொண்ட பெறுபேறுகளுக்கு வெற்றிகரமாக நெருங்கி, முன்னைய 5 வருடங்களினைப் போன்றே இவ்வாண்டிற்குள்ளும் பாராட்டத்தக்கதொரு செயலாற்றுகையொன்றை குறிக்க முடிந்ததனைப் பற்றி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் /பிரதான நிறைவேற்று அதிகாரி ஆக எனக்குக் கிடைத்த விசேடமான ஒரு வரப்பிரசாதமென நான் காண்கிறேன்.

அவ்வாறே வெளிச் சூழல் மற்றும் சமூகச் சிக்கல்களின் மத்தியிலும் எந்தவொரு சவால் மிகுந்த நிலைமைக்கும் முகம் கொடுத்து எதிர்காலத்திலும் பின்னடையாது முயற்சியுடன் எழுந்து நிற்பதற்கு எம்மிடமுள்ள ஆயத்தத்தைப் பற்றி பணிவான பெருமையுடன் அறியத் தருவதற்கு விரும்புகின்றேன்.

## செயற்பாட்டு செயலாற்றுகை

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நோக்கு மற்றும் செயற்பணியின் பிரகாரம், தரமான மரம் மற்றும் மரத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய முடியுமான விலைக்கு வழங்கும் மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வது எமது முதன்மைப் பணியாகும். இலங்கையில் தர ரீதியாக உயர்ந்த பொருளாதார பெறுமதியைக் கொண்ட வெற்றிகரமான வனச் செய்கைகளைக் குறைத்தல் மற்றும் போட்டியான அரிமரச் சந்தை காரணமாக இவ்வாண்டில் அரிமரம் சார்ந்த உற்பத்திகளின் கேள்வியைப் பூர்த்தி செய்வது அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு பாரிய சவாலாக இருந்தது.

கூட்டுத்தாபன ஆரம்பத்திலிருந்தே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுச் செயன்முறையானது தங்கியிருப்பது வன பாதுகாப்பு திணைக்களத்தினால் மீண்டும் வனச்செய்கைக்காக விடுவிக்கப்படும் வனச்செய்கைகளைப் போன்றே, வனமோசடி மரங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும் நன்கொடையான மரங்களின் மீதாகும். இந்த மர ஆதாரங்களைப் பயன்படுத்தி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் குற்றிகள், கிழிக்கப்பட்ட மரங்கள், சிலிப்பர்கள், யானைவேலிக் கம்பங்கள்,மின் கம்பங்கள், வேலிக் கம்பங்கள் மற்றும் தளபாடங்கள் போன்ற பல்வேறுபட்ட அரிமரம் சார்ந்த உற்பத்திகளைத் தயாரிக்கின்றது. எனினும் பல வருடங்கள் பூராகவும் ஆரோக்கியமான வனச்செய்கைகள் விடுவிக்கப்படாமை என்ற காரணத்தினால் நாட்டில் எதிர்பார்க்கப்பட்ட அரிமரத் தேவையை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் மாத்திரம் வழங்குவதற்கு முடியாமல் உள்ளது. வேலைத்தளம் சார்ந்த துறைச் செயற்பாடுகளை உயர் தரத்துடன் மேற்கொள்வதற்காக போதுமான வளங்களையும் மனித பலத்தையும் வழங்குவதனால் செயற்பாட்டு பெறுபேற்றை முன்னேற்றுவது அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் எதிர்பார்ப்பாகும்.

2023 ஆண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு வன பாதுகாப்பு திணைக்களத்தினால் 837.45 ஹெக்டயாரான வனச் செய்கைகளின் அறுவடையைப் பெற்றுக் கொள்வதற்காகக் கிடைத்துள்ளது. அவற்றுள் 626.92 ஹெக்டயார் தேக்கு செய்கைகளாகும். இலங்கையில் தேக்கு உற்பத்திக்கு உள்ள உயர்ந்தளவிலான கேள்விகளின் காரணமாக எதிர்காலத்தில் வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து தேக்கு செய்கைகளை அதிகளவில் பெற்றுக் கொள்வதற்கு நாம் முயற்சி செய்வோம். எவ்வாறாயினும் 2023 இல் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் குற்றிகள் 93103$m^3$, கிழிக்கப்பட்ட மரங்கள் 4528 $m^3$ மின் கம்பங்கள் 7039, சிலிப்பர்கள் 22879, யானைவேலிக் கம்பங்கள் 1056, வட்டக் கம்பங்கள் 51863, வேலிக் கம்பங்கள் 65290 மற்றும் விறகுகள் 34,930 $m^3$ இனைத் தயாரிக்கப்பட்டன. மேலும், அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டில் தளபாடங்களின் தயாரிப்புப் பெறுமதி 194 மில்லியன்களாகும்.

அரிமரக் கைத்தொழிலில் முதன்மையாளனாக, தரமான அரிமரத்தை வழங்கி ஏனைய அரிமரக் கைத்தொழில்களுக்கு உதவுவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் முடிந்துள்ளது. மேலும், எமது தயாரிப்புகளை அடிக்கடி எதிர்பார்க்கின்ற எமது மதிப்பு மிக்க நுகர்வோருக்கு உயர் முடிவினைக் கொண்ட அழகான, பெறுமதி வாய்ந்த தளபாடங்களை வழங்குவதற்கு நாம் இணைக்கப்பட்டுள்ளோம். அச்சிறந்த நிலையில் தயாரிப்புக்களை வழங்குவதனால் நாம் அவர்களின் நம்பிக்கையைப் பாதுகாத்துள்ளோம். அவ்வாறே, எமது தயாரிப்புக்களுக்கான தெளிவாகத் தெரிகின்ற பெறுமதியைச் சேர்ப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் தளபாட உற்பத்திச்சாலைகளுக்கான ISO தரச் சான்றிதழையும் நாம் பெற்றுக் கொண்டுள்ளோம்.

**நிதிச் செயலாற்றுகை**

2023 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றின் பிரகாரம், வரி செலுத்துவதற்கு முன்னரான இலாபம் 1,273 ரூபா மில்லியன் ஆனதோடு, அது 2022 இனை விட அதிகரித்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 2022 ஆண்டில் வரிக்கு முன்னரான இலாபமாக 1,015 ரூபா மில்லியனை ஈட்டியது. வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து மரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக விற்ற விலையில் 60% - 65% இடையிலான அளவினை திணிவிறையாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் திறைசேரிக்குச் செலுத்தியுள்ளது. நாட்டின் நிர்மாணத் துறை சுமார் 70% ஆனவை வீழ்ச்சியடைந்து நாட்டின் பொருளாதாரமும் மகிழ்ச்சியற்ற நிலைக்கு உள்ளாகிய சந்தர்ப்பமொன்றில் அரிமரங்களுக்கான நுகர்வோரின் கேள்விகள் பாரியளவில் குறைந்தன. அவ்வாறான பின்னணியொன்றில் எமது செலவினை உள்ளடக்கிக் கொள்வதற்காக தயாரிப்புகளின் விலையை அதிகரிக்காது அரிமரம் மற்றும் அரிமரம் சார்ந்த உற்பத்திகளை நுகர்வோருக்கு வழங்குவதற்கு ஊழியர்கள் கடின உழைப்பினை எடுத்தனர்.

இச்சிறந்த வெற்றியானது முழுமையாக செலவைக் கட்டுப்படுத்துதல் மற்றும் புதிய பணிக்குழுவினரை இணைத்துக் கொள்ளாது தற்போதுள்ள ஊழியர்களின் வினைத்திறனை உயர் மட்டத்தில் தக்கவைத்துக் கொண்டதன் பெறுபேறாகும். நிறுவனத்தின் வெற்றிடங்கள் 800 க்கு அண்மித்த அளவு உருவாகினாலும், இணைத்துக் கொள்வது நிறுத்தப்பட்டதோடு, வாழ்க்கைச் செலவு உயர்ந்து சென்றதன் காரணமாக வெளிநாட்டுத் தொழில்களுக்குச் செல்வதற்கு கேட்டு விலகல்கள் இடம்பெற்றதுடன், ஊழியரின் எண்ணிக்கை குறைந்த மட்டத்திற்கு வந்தது. அதனால், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பெரும்பாலான நடவடிக்கைகளை தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட பணிக்குழுவிற்கு மேலதிக கடமைப்பொறுப்புக்களை ஒப்படைப்பதன் மூலம் மேற்கொண்டது.

எனினும், எமக்கு போதுமானளவு மனிதப் படையொன்றும் ஊழியர்களுக்குத் தேவையான வசதிகள் போதுமானளவு இருந்திருந்தால், இதனை விட பாரியளவு வெற்றியினை நோக்கி நெருங்குவதற்கு நாம் இன்னும் முன்னேற்றமடைவதற்கு முடியுமாக உள்ளதென்பது எனது நம்பிக்கையாகும். எவ்வாறாயினும், நிதிச் செலவைக் குறைப்பதற்காக பல்வேறான முகாமைத்துவ நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏற்பட்டதோடு, பிராந்தியங்களை ஒன்றுபடுத்தி ஒரு பிராந்திய முகாமையாளரினால் பல பிராந்தியங்கள் முகாமை செய்யப்படுவதனை உதாரணமாகக் காட்ட முடியும். இங்கு பிரதான நோக்கமாக இருப்பது போக்குவரத்துச் செலவைக் குறைப்பதாகும். அவ்வாறே, ஒரு பிரிவினால், நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் மூலம் ஊழியர் நலன்களுக்கான செலவுகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஊழியர்களிடமிருந்து உயர்ந்தபட்ச வினைத்திறனைப் பெற்றுக் கொள்வதும் இடம்பெற்றது. அவ்வாறே, பிராந்திய மதிப்பீட்டுச் செயன்முறையானது அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளதோடு, அது ஊழியர்களுக்கான புத்துணர்ச்சியாகியது. எனினும் இச்சிரமத்துக்கு மத்தியிலும் நாட்டிற்குள் அரிமர வழங்கல்களை தொடர்ச்சியாக நடத்திச் செல்வது எமக்கு மிகக் கடினமான பணியொன்றாக இருந்தது. எனினும், இன்னும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நாடு பூராகவும் செயற்பாட்டு வலையொன்றினைக் கொண்டுள்ளது. பிராந்திய அலுவலகங்கள் 10 உம், அரிமரக் களஞ்சியங்கள் 51 உம், காட்சியறைகள் 9 உம், தயாரிப்பு வளாகங்கள் 3 உம் மற்றும் தளபாடத் தொழிற்சாலைகள் 3 உம் இருந்தன. மேலும், 2022 ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனைச் செலவு 2,183 ரூ. மில்லியன்களும், சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிக்கும் செலவுகள் 729 ரூ. மில்லியன்களும், நிர்வாகச் செலவுகள் 959 ரூ. மில்லியன்களுமாக இருந்தாலும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு 2023 ஆண்டில் 4,092 ரூ. மில்லியன்களான வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு முடிந்தது.

இலங்கை தேசிய கைத்தொழில் சபையால் ஏற்பாடு செய்யப்படுகின்ற இலங்கையின் கைத்தொழில் துறையில் தொழில் முனைவோருக்கு அவர்களின் உற்பத்திகள் மற்றும் சேவைகள் துறைக்கு உரிய வருடாந்த விருதுகளை வழங்குவது இடம்பெறுகின்றது. இவ்விருது விழாவின் மதிப்பீட்டில் முறையான செயன்முறையொன்று முற்றிலும் சரியானது என்பதோடு, இங்கு பிரதான மதிப்பீட்டின் துறைகளானவை வருமானம், பெறுமதியை அதிகரித்தல், உற்பத்தித்திறன், ஊழியர்களுக்கான பொறுப்புக்கள், முன்னேற்றம் மற்றும் எதிர்காலம், ஆய்வு மற்றும் அபிவிருத்தி, நிலைமையை உறுதிப்படுத்தல், சூழற் பொறுப்பு, ஆரோக்கியம், பாதுகாப்பு, மற்றும் சமூகப் பொறுப்புக்களாகும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு 2023 இல் தேசிய மட்டத்தில் உற்பத்தித் துறைக்கான அரச பிரிவின் கீழ் வெள்ளி விருதினை வென்றிட முடிந்தது. இவ்விருதைப் பெற்றுக் கொள்வதற்காக எமது பிரதான துறையான செயற்பாடு, நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் மனித வளங்களின் பணிகள் சவாலான நிலைமைகளின் மத்தியிலும் இடம்பெற்றதெனினும் சிறப்புமிக்க வெற்றியை நோக்கிக் கொண்டு சென்றன.

**சமூகப் பொறுப்புக்களின் (CSR) செயற்பாடுகளுக்கான பங்களிப்பு**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 10 பிராந்தியங்களினுள் நாற்றுமேடைகள் 28 இனை நடாத்திச் செல்வதோடு, பெறுமதி

வாய்ந்த மரங்கள் மற்றும் ஏனைய காடுகளின் தன்மையான தோற்றத்தையுடைய கன்றுகளை உற்பத்தி செய்தது. ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி செய்யும் பிரிவினால் அரசினதும் தனியார் அல்லாத அமைப்புக்களுக்கு இக்கன்றுகள் இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. 2023 ஆண்டில் பல்வேறுபட்ட மரநடுகை நிகழ்ச்சிகளுக்கான கன்றுகள் 39,226 இனைப் பகிர்ந்தளித்ததோடு, 2023 ஆண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நாற்றுமேடைகளின் மூலம் 37,500 கன்றுகளை உற்பத்தி செய்திருந்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உள்நாட்டு அரிமரக் கைத்தொழிலை பாதுகாத்தல் மற்றும் உயிரினப் பல்வகைத்தன்மையை விருத்தி செய்வதற்காக, மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களினூ டாக அரிமர வகையை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் காபன் ஒதுக்கீட்டினை அதிகரித்தல், மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் காலநிலை மாறுதல்களை தடுத்து நிறுத்துவதற்காக செயற்படுகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரங்களை நிலையானதாக பாவிப்பதற்கான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு Sustainable Development Goals (SDGs) உடன் பொறுப்புடன் இணைந்துள்ளது.

அவ்வாறே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் ஊழியர்கள் தமது விடயத்தை விளைதிறனாகவும் வினைதிறனாகவும் நிறைவேற்றுவதற்காக அதற்குரிய பயிற்சி நடவடிக்கைகளைப் பற்றி அடிக்கடி கவனம் செலுத்தப்படுகின்றது. 2023 ஆண்டில் ஊழியர்கள் 1061 இற்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சிகள் 52 இற்காக இணைக்கப்பட்டதோடு, அதன் செலவு ரூ. 2,837,557ஆகியது. அவ்வாறே வெளித் தரப்பினரையும் இணைத்துக் கொண்டு நிகழ்ச்சிகள் பலவற்றை நடாத்தியிருந்தது. 2023 ஆண்டில் பல்வேறுபட்ட துறைகளில் பயிற்சியாளர்கள் 445 க்கு பயிற்சியை வழங்க முடிந்தது. அவ்வாறே, அரிமர தொழிநுட்பப் பயிற்சி நிறுவனம் (TTTI) இனால் NAITA எதிர்பார்ப்பாளர்கள் மற்றும் மதிப்பீட்டுக் குழுவுக்கு அவர்களின் அப்பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மூலப்பொருள், கருவிகள், உபகரணங்கள் மற்றும் இடத்தை வழங்கி உதவி செய்ததோடு, 2023 ஆண்டில் மாணவர்கள் 107 இனர் மதிப்பீடு செய்யப்பட்டனர். அரிமரத் துறைக்குரிய NVQ நிகழ்ச்சிகளையும் நடாத்தியதோடு, மரக் கலைஞரின் பணிகளுக்கு மிக உயர்ந்த திறமையை வழங்குவதற்கு அது உதவியது. அதற்கு மேலதிகமாக, சுமார் 404 ஆன பயிற்சியாளர்கள் வெளிப் பயிற்சி நிகழ்ச்சிகளினூடாக பயிற்சியளிக்கப்பட்டனர். அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு, நிறுவனத்தின் வியாபார தேவைகளைப் போன்றே, நவீன அறிவின் பிரகாரம் அதற்குரிய சமூகப் பிரச்சினைகளைப் பற்றியும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நவீன அறிவை வெளி சமூகத்தினருடன் பகிர்ந்து கொள்வதற்காக ஆய்வுகள், மாநாடுகள் மற்றும் கட்டுரைகளை வெளியிடுவதினூடாக செயற்படுகின்றது. 2023 ஆண்டில் மொத்தமாக ஆய்வு மஞ்சரிகள் 7 இனை வெளியிடப்பட்டன. அவ்வாறே, அரிமரங்களை பாதுகாப்பாகப் பயன்படுத்தல் மற்றும் வணிக வன வியாபாரத்தை பிரசித்தப்படுத்துவதற்காக கண்காட்சிகளில் செயற்பாட்டுடன் வழிகாட்டல்கள் கிடைத்தன. 2023 ஆண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கண்காட்சிகள் 4 இற்காக ஒத்துழைப்பு வழங்கியது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவின் பிரதான பணிகளுள் மர வகைகளை இனங்கண்டு கொள்வதற்காக நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல், அரிமர இழையங்களை விஞ்ஞான குணாதிசயங்களைப் பயன்படுத்தி அரிமரத்தை சரியாக இனங்கண்டு கொள்ளல் மேற்கொள்ளப்படுவதோடு, அரிமரங்களின் உறுதித்தன்மையைப் பரீட்சித்து அறிக்கையை வழங்குதல் போன்று அரிமரத்துக்குள்ளே பாதுகாப்பு செறிவூட்டல்களைப் பற்றிய ஆய்வு அறிக்கைகள் உட்பட நிலைமை அறிக்கையை வழங்குவதனையும் மேற்கொள்கின்றது. 2023 ஆண்டில் அரசாங்க மற்றும் தனியார் அமைப்புக்களுக்கான அரிமர சான்றிதழ்கள் 214 இனை வழங்கியுள்ளது.

**எதிர்கால நோக்குகள்**

வளிமண்டலத்தில் உள்ள காபனீரொட்சைட் தாவரங்களினுள் உறிஞ்சப்படுவதன் மூலம் நீண்ட காலம் நீடிக்கும் மர பாவனைக்குள்

காபனீரொட்சைட்டை உற்பத்திக் காலத்தினுள் களஞ்சியப்படுத்திக் கொண்டு வளிமண்டலத்தில் காபன் வெளியேற்றத்தினைக் குறைக்கின்றது. இதன் மூலம் காலநிலை சீர்கேட்டைக் குறைப்பதற்கு நிலையானதான ஒத்துழைப்பினை வழங்குகின்றது.

வளிமண்டல காபனீரொட்சைட்டைக் குறைப்பதற்கும் காபனை களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்வதற்கும் பயன்படுவதனால், அரிமரம் மற்றும் மரத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை அதிகளவாகத் தயாரிப்பது முக்கியமானதாகும். இதனை நோக்காகக் கொண்டு இப்பணிகளை எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிக்குழுவின் செயலாற்றுகையை அதிகரித்து, அதிகளவான வசதிகளையும் ஊழியர்களின் மகிழ்ச்சியையும் அதிகரிப்பதன் மூலம் எதிர்காலத்தில் பணிகளை நிறைவேற்றுவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியாக சேவையாற்றி கடந்த 5 வருடங்களினுள் நிறுவனத்தின் முன்னேற்றத்துக்காக 5 ரூபா மில்லியனான பணம் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. பொது முகாமையாளராக இது எனது வெற்றியொன்று எனக் கருதுகிறேன்.

**நன்றி**

கடந்த 5 ஆண்டுகளினுள் பொது முகாமையாளராக நான் பணிப்பாளர் சபையின் வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உயர்ந்தபட்சமாக செயலாற்றியதோடு, பணிப்பாளர் சபைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர், பணிப்பாளர் சபை, முகாமைத்துவம் மற்றும் பணிக்குழுவினரால் வழங்கப்பட்ட அர்ப்பணிப்புக்காக எனது கௌரவத்தை தெரிவிப்பதற்காக இதனை சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன். அவ்வாறே, எமது கௌரவ நுகர்வோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன், ஏனெனில் அவர்கள் எமது அரிமரம் மற்றும் அரிமர ஆரம்ப உற்பத்திகளுக்காக நம்பிக்கையொன்றை ஏற்படுத்தியது. நாம் அவர்களுக்கு விசேடமான உற்பத்திகளை வழங்குவதற்கு ஆயத்தமாக உள்ளோம்.

அவ்வாறே வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளருக்கும் அவரின் உதவிப் பணிக்குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிக்கிறேன். மேலும், வன பாதுகாவலர் நாயகம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் பணிக்குழுவினருக்கு, அவர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளுக்காக எனது கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் மொத்த பணிக்குழுவினருக்கும் எனது மனமார்ந்த கௌரவமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களுக்கு போதியளவு வசதிகள் இல்லாவிட்டாலும், பாரிய சவால்கள் இருந்தாலும் தளராது சேவையாற்றுதல், அவர்களின் அர்ப்பணிப்பு, நிறுவனத்துக்குக் காட்டும் அன்பு, புதிய உற்பத்திச் செயன்முறைகள் மற்றும் இடைவிடாது முயற்சியுடன் செயலாற்றுதல் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தைப் போன்றே, நாட்டுக்காகவும் சேவையாற்றுவதென நாம் நம்புகின்றோம்.

இப்போட்டியான சந்தையினுள் எப்போதும் எம்மீது நம்பிக்கை வைத்து எமது நிலைமையை உயர்ந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதற்கு உறுதியாக உள்ள எமது மதிப்புமிக்க நுகர்வோருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு நான் இறுதியாக விரும்புகின்றேன்.



**கலாநிதி என்.டீ. ருவண்பதிரண**
பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# எமது பொறுப்புக்கள்

- காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக் குற்றிகள், அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் இப்பணிகளுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்.
- மரக் குற்றிகளாக்கும் அலகுகள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாத்தல், பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலர வைத்தல் மற்றும் உலர வைக்கும் சூளைகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்தல்.
- அரிமர விற்பனை நிலையங்களை நடத்திச் செல்லுதல்.
- அரிமர உபபொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்
- அரிமரங்களை இறக்குமதி செய்தல்
- புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்
- அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் பகுதியளவு முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்
- தனியார்க் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சியம் அல்லது வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்தல்
- காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்
- பிரம்புகளை இறக்குமதி செய்தல்
- மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங்காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்குதல்
- அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்களைப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்இ சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சூழலைப் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுமையான பயனைப் பெற்றுக் கொள்வதற்காக திட்டமிடுதல் மற்றும் அதற்காக முதலீடு செய்தல்.
- வன பாதுகாவலர் நாயகத்தின் அனுமதியுடன் கருங்காலி அரிமரத்தை பிரதான அரிமரமாகப் பயன்படுத்தியதும் வடிவமைப்புக்களை அழகுபடுத்துவதற்காக மாத்திரம் கருங்காலி அரிமரத்தை பயன்படுத்தியுள்ள தளபாடங்களை ஏற்றுமதி செய்தல்
- அரிமர தளபாடங்கள் அரிமரத்திலான தளபாடங்களாகவும் அரிமர அலங்கார தயாரிப்புகளை தனியார் பிரிவினரிடமிருந்து கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல்
- வெளிநாட்டுக் காட்சியறைகளுக்கு உரித்தான வியாபார நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களின் கீழ் தளபாடங்களை ஏற்றுமதி செய்தல்
- நீதிமன்ற விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட விதிகளைக் கருத்தில் கொண்டு அரசுடமையாக்கப்பட்ட அரிமரங்கள் மற்றும் அரிமர தயாரிப்புக்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல்
- நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு அந்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அரசுடமையாக்கப்படாத அரிமரங்கள் மற்றும் அரிமர தயாரிப்புக்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல்

# எமது வர்த்தகப் பெறுமானங்கள்



சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தக ரீதியாக வெற்றிகரமாகச் செயற்படக் கூடிய பொதுத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங் கண்டுள்ளோம்.

சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச் சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கும் அனைத்து இலங்கையர்களுக்குமான நம்பிக்கை அடிப்படையினுடாக மதிப்புகளை வளர்ப்பதன் மூலம் அவர்களுடன் நேர்மையான- வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது எமது இருப்புக்கு அடிப்படைக் காரணமாகும் என நாம் இனங்கண்டுள்ளோம்.

திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் வினைத்திறன் மட்டத்தை மேம்படுத்துவதற்குச் செயற்படுகின்றோம்.

வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா அலுவலகங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.

அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.

எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.

# பணிப்பாளர் சபை - 2023

- **திரு. பீ. எஸ். குணரத்ன**
  **தலைவர்**
  அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

---

- **கலாநிதி கே. எம். ஏ. பண்டார**
  **பணிப்பாளர்** (23.01.2023-30.10.2023)
  வன பாதுகாப்பாளர் நாயகம்

---

- **திரு. ஈ. ஏ. பீ. என். எதிரிசிங்ஹ**
  **பணிப்பாளர்** (23.12.2023)
  வன பாதுகாப்பாளர் நாயகம்

---

- **திருமதி. எஸ். ஏ. சீ. குலதிலக**
  **பணிப்பாளர்** (23.01.2023 - 25.09.2023)
  திறைசேரி பிரதிநிதி

---

- **திரு. எச். பீ.கே. பெரேரா**
  **பணிப்பாளர்** (30.10.2023- 29.12-2023)
  திறைசேரி பிரதிநிதி

---

- **திரு. சீ. விக்கிரமரத்ன**
  **பணிப்பாளர்**

---

- **சந்தன பெரேரா**
  **பணிப்பாளர்**

---

- **திரு.கே. ஏ. டீ. எஸ். சீ.கே. கதுருசிங்ஹ**
  **பணிப்பாளர்**

---

- **திரு. ஈ. ஆர். குலதுங்க**
  **பணிப்பாளர்**

---

- **திருமதி. டீ. பீ. காரியவசம்**
  **பணிப்பாளர் சபைச் செயலாளர்**
  (23.01.2023-13.12.2023)

---

- **திருமதி. தர்க்ஷனீ சமரவிக்கிரம**
  **பணிப்பாளர் சபைச் செயலாளர்** (29.12.2023)

---



# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு – 2023

**கலாநிதி நிமல் ருவன்பதிரண**
பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி

**திரு. ஜீ. டீ. எஸ். குமாரசிங்ஹ**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

**திரு. எம். ஏ. சீ. என். சமரசிங்ஹ**
பிரதி பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்)

**திரு. ஜீ. ஜீ. திஸர கமகே**
பிரதி பொது முகாமையாளர் (செயற்பாடு) (பதில்)

**திரு. டபிள்யூ. பீ. சமந்த**
பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)

**திரு. எச். எம். எஸ். மாதவ**
பிரதி பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) பதில்

**திரு. ஜீ. ஜீ. திஸர கமகே**
பிரதி பொது முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி) (பதில்)

# 2023 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபையின் மீளாய்வு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் எமது ஆண்டறிக்கையையும் முன்வைப்பதில் பணிப்பாளர் சபையாக நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

**அறிமுகம்**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1968 ஆரம்பிக்கப்பட்ட அரச வியாபார நிறுவனமொன்றாகும். அது 1957 இலக்கம் 49 உடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் விதிகளின் கீழ் நிறுவப்பட்ட அரச நிறுவனமொன்றாக அமைக்கப்பட்டது" அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் ''சம்பத்பாய'' பத்தரமுல்லவில் அமைந்துள்ளதோடு, பிராந்திய அலுவலகங்கள் நாடு பூராகவும் அமைந்துள்ளன.

**பிரதான செயற்பாடுகள்**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் முதன்மையாக தமது வருமானத்தை அரிமரம் மற்றும் மரத்திலான உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் தனது வருமானத்தை ஈட்டுகிறது.

**வியாபார மீளாய்வு**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சிறந்த தரத்திலானதும் வெளிப்படையாகத் தோன்றுவதுமான குழுக்கள் எனும் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை பற்றிய கடந்த காலமொன்று மற்றும் பரம்பரயொன்றுள்ள பிரபலமான பாரியதொன்றாகும். இலங்கையில் சிறந்த தரத்திலானதும் நம்பிக்கையானதுமான அரிமர வழங்குனர்களாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் ஆரம்ப வருடமான 1968 ஆம் ஆண்டிலிருந்தே தமது வியாபாரத்தைக் கட்டியெழுப்பியுள்ளது. அவ்வாறே, தமது வியாபாரத்தை நோக்கியதான பாதையானது வளமான நிறைவொன்றிற்காக பயணம் செய்யும் பாதையொன்றாகும். புதுமையான அனுபவங்கள், நுகர்வோரை மத்தியதாகக் கொண்ட திட்டங்களை மேலும் வியாபாரத்தின் வெற்றியையும் பெறுமதியையும் உயர்த்துகின்றது.

நிலையற்ற தன்மைகள் மற்றும் சவால்கள் மிகுந்த சூழ்நிலையொன்றிற்குள்ளும், மீளாய்வாண்டில் ஒழுங்கான செயலாற்றுகையினை வழங்கியுள்ளது. அதன் மூலம் கடினமான சந்தர்ப்பங்களிலும் தளராமல் இருப்பதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திடமுள்ள திறன் மற்றும் ஆயத்தம் மிகவும் பிரதிபலிப்பாக உள்ளது.

நிலையாக இல்லாத கடன், பணவீக்கத்தினால் ரூபாவின் வீழ்ச்சி மற்றும் அந்நியச் செலாவணியின் இருப்புக்களின் குறைபாடுகளைச் சந்தித்து இலங்கையின் பொருளாதாரம் தளம்பியது. அதனால் வெவ்வேறான சமூக மட்டங்களிலும் உள்ள அனைத்து இலங்கையர்களும் முன்னர் இல்லாத கஷ்டங்களுக்கு முகம்கொடுத்தனர். எவ்வாறாயினும், தேசிய பொருளாதாரத்துக்குள்ள சவால்கள் குறுகிய கால மற்றும் மத்திய காலமாக தொடர்ச்சியாக உள்ளதெனினும், இச்சவால்களைப் பொருட்படுத்தாது பெறுமதியை உயர்த்துவதற்காக செலவுகளை மேம்படுத்தல், தொகுதிகளின் அடிப்படையிலான அபிவிருத்தியில் உயர்ந்த கவனத்தைச் செலுத்துதல், ஆற்றல்மிக்க முகாமைத்துவம் உட்பட நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் அறிவினையும் பயன்படுத்திக் கொண்டதன் மூலம் மீளாய்வுக்காக உட்படுத்தப்பட்ட வருடத்தினுள் உறுதியான செயலாற்றுகையொன்றை அடைந்து கொள்வதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு முடிந்தது.

**நிதிசார் செயலாற்றுகை**

பொருளாதார நெருக்கடி வாடிக்கையாளர் நடத்தை அடிப்படையில் எமது சில உற்பத்திப் பொருட்களின் செயற்பாடு தொடர்பில் கருத்திற் கொள்ள வேண்டிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் 2023 ஆம் ஆண்டின் வருமானமாக 4,092 ரூபா மில்லியன்களை ஈட்டியிருந்ததுடன், அது கடந்த ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 14% ஆன வீழ்ச்சியாகும். அவ்வாறே, கூட்டுத்தாபனத்தினால் 2023 ஆம் ஆண்டிற்காக ஈட்டியுள்ள மொத்த இலாபம் 1,908 ரூபா மில்லியன் ஆவதோடு, அது முன்னைய ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 17% ஆன வீழ்ச்சியாகும்.

| செயலாற்றுகை | 2022 | 2023 |
|---|---|---|
| | ரூ. மி | ரூ. மி |
| விற்பனைப் புரள்வு | 4,743 | 4092 |
| மொத்த இலாபம் | 2290 | 1908 |
| செயற்பாட்டு இலாபம் | 2324 | 2004 |
| செயற்பாடற்ற இலாபம் | 14.9 | 14.5 |
| திறைசேரி வரி மற்றும் வருமான வரிக்கு முன்னைய இலாபம் | 1015 | 1273 |










மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டினுள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் 1,273 ரூபா மில்லியனான வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தைப் பதிவு செய்ததோடு அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25,5% ஆன விருத்தியாகும். பெறுமதியை உயர்ந்தபட்சமாக்குவதற்கு செலவின தேர்வுமுறைகள் பற்றிய உத்திகள்" தொகுதியை இயக்குகின்ற விருத்தியிலான உயர்ந்த கவனமொன்றைச் செலுத்துவதிலும் வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல் இவ்விருத்தியை அடைந்து கொள்வதற்கான காரணங்களாக அமைந்தன.

வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் இலங்கையில் வேலையில்லாமையை மேலும் குறைப்பதற்காக அரசாங்கத்துக்கு உறுதுணையாக அதிகமான வேலைவாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் சந்தைக்குத் தரமான உற்பத்திகளை வழங்குதல் அரச நிறுவனமொன்றாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாக நாம் கருதுகின்றோம். 2023 ஆம் ஆண்டில் பொருளாதார வீழ்ச்சியின் கீழும் கூட்டுத்தாபன ஊழியர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி ஊழியர் கிரயமாக 1,584 ரூபா மில்லியனைச் செலவிட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் மொத்த ஊழியர் எண்ணிக்கை 1,390 ஆக இருந்ததோடு, 2022 ஆம் ஆண்டில் 1,500 ஆகும். இவ்வாறு தொழிலாளர் குறைவடைவதற்கான காரணமாக இருப்பது ஆண்டினுள் ஊழியர்கள் ஓய்வு பெற்றமையாகும். அவ்வாறே அரச கொள்கைத் தீர்மானங்களின் பிரகாரம் அத்தியாவசியமான வெற்றிடங்களுக்கு மாத்திரம் ஊழியர்களை இணைத்துக் கொள்வது இடம்பெற்றுள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான சொத்துக்கள் மீதான இலாபம் மற்றும் உரிமையாண்மை அடிப்படையிலான இலாபம் பின்வருமாறு காணப்படுகின்றது.

| | 2022 | 2023 |
|---|---|---|
| ROE | 9% | 15% |
| ROA | 6.6% | 12% |

2022 ஆம் ஆண்டில் 6,6% வரி செலுத்துவதற்கு முன்னர் சராசரி சொத்துக்கள் மீதான இலாபம் (ROA) 2023 ஆம் ஆண்டில் 12% வரை அதிகரித்ததோடு, 2022 ஆண்டில் 9% ஆன சராசரி பங்கின் மீதான இலாபம் (ROE) 2023 ஆண்டிலும் 15% வரை உயர்வடைந்தது.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டினுள் அரச வருமானத்திற்கு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 763 ரூபா மில்லியன் ஆக இருந்ததோடு, அரச திறைசேரிக்கு செலுத்திய 649 ரூபா மில்லியனான வரியும் அதற்கு உட்படுத்தப்பட்டது.

**உற்பத்தி**

செயற்பாட்டு செயன்முறைச் சூழல் நேயமிக்க முறைமைகள் ஊடாக மேற்கொண்டு உயர் உற்பத்தி மட்டத்தினைப் பேணுதல் போன்றே நிறுவனத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், இலாபத்திற்குப் போன்றே நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளி அங்கங்களின் சிறந்த நிலைப்பாட்டிற்கும் இலாபத்திற்கும் முக்கியமானது என்பதனை கூட்டுத்தாபனம் கடுமையாக நம்புகின்றது.

அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிற்கு இணங்கி அவற்றிற்கு இணங்க செயற்படல், முறையான வேலைத்தள வகைப்படுத்தல் பட்டியலைத் தயாரித்தல், விஞ்ஞான முறையிலான அரிமரப் பிரித்தெடுப்பு, சரியான முறையில் அரிமரங்களைப் பாதுகாப்பு முறையான பாவனை, இயந்திர உபகரணங்களின் முறையான ஸ்தாபிப்பும் பராமரிப்பும், ஊழியர் ஆட்சேர்ப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதில் சரியான செயன்முறையொன்றை ஏற்படுத்துதல், கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிலைபேறான முறையில் நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருந்தது. அதனால் இலங்கையில் நிலைபேறான வன முகாமைத்துவத்திற்காக பங்களிப்பை வழங்குவது அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும்.

அதற்கு மேலதிகமாக தொழிற்சாலைகளின் போட்டியாளர்களை விட போட்டியுடனான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள கீழ்க்காணும் உத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரச மரக் கூட்டுத்தாபனம் ஆலோசனை செய்துள்ளது.

- வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் விடுவிக்கப்படுகின்ற வனச்செய்கையை விஞ்ஞான அரிமர பிரித்தெடுப்பிற்காக மேற்கொள்ளல்.
- சந்தைக்காக மரக் குற்றிகள், புகையிரத திணைக்களத்துக்காக சிலிப்பர்கள், மின்சார சபைக்காக மின்கம்பங்கள் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்காக யானைவேலிக் கம்பங்கள் போன்றே வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கிழிக்கப்பட்ட அரிமரங்களைத் தயாரித்தல்.
- வணிக பெறுமதிமிக்க அரிமரங்களை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களிலிருந்தும் தனியார் காணிகளிலிருந்தும் கொள்வனவு செய்தல்
- நன்கொடை மற்றும் வனமோசடி அரிமரங்ளைப் பெற்றுக் கொள்ளல்.
- வனச்செய்கை நிகழ்ச்சிகளுக்காக உற்சாகத்துடன் பங்குபற்றுல் (செயலாற்றுதல் மற்றும் பங்குபற்றுதல்)

  புகையிரத சிலிப்பர்களை இறக்குமதி செய்து பெறுமதியை சேர்ப்பதன் பின்னர் மீண்டும் ஏற்றுமதி செய்தல்.

**அரச காடுகளிலிருந்து மரங்களை வெட்டுதல்**

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் வன முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ் மற்றும் யூக்கலிப்டஸ் போன்ற வனச் செய்கைகள் விடுவிக்கப்பட்டுள்ளதோடு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வெட்டுவதற்காக விடுவிக்கப்பட்டுள்ள ஹெக்டயார் அளவுகள் கீழே உள்ளவாறு ஆகும்.

| மர இனம் | முற்றாக வெட்டுதல் (ஹெக்டயார்) | | மெல்லியதாக்குதல் (ஹெக்டயார்) | |
|---|---|---|---|---|
| | **2022** | **2023** | **2022** | **2023** |
| தேக்கு | 450 | 626.92 | 300 | 504.42 |
| யூக்கலிப்டஸ் | 100.4 | 109.2 | 110 | 274 |
| பைனஸ் | 47.53 | 52.43 | - | 8.5 |
| காயா | - | - | 181 | 245.6 |
| எக்கேஷியா | 18.4 | 48.9 | - | - |

**அரிமரங்களாக மாற்றீடு செய்தல்**

2023 ஆம் ஆண்டில் அரியப்பட்ட 4,528 கன மீற்றர் தயாரிக்கப்பட்டுள்ளதோடு 2022 ஆம் ஆண்டினுள் அரியப்பட்ட 3,432 கன மீற்றர் மர ஆலைகளின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு,கன மீற்றர் 2,623 ஆனவை நாடு பூராகவும் அமைந்துள்ள விற்பனைக் களஞ்சியங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**மின் கம்பங்கள் மற்றும் சிலிப்பர்களைப் பாதுகாத்தல்**

2023 ஆம் ஆண்டினுள் 22,876 சிலிப்பர்கள் மற்றும் யானைவேலிக் கம்பங்கள் 1,056 ஆனவை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கல்தெமுல்ல, கெப்பெடிபொல மற்றும் பூஸ்ஸ பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிலிப்பர் தயாரிப்பு 89% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது, இலங்கை மின்சார சபையினதும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மின் கம்பங்கள் மற்றும் யானைவேலிக் கம்பங்களுக்கான கேள்விகள் குறைவடைந்த காரணத்தினால் கடந்த ஆண்டுகளில் முறையே 5,978 ஆகவும் 1,056 ஆகவும் கவனிக்கப்படத்தக்க வகையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

**தளபாட உற்பத்தி**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தெமுல்ல மற்றும் பூஸ்ஸ ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 194 ரூபா மில்லியன் பெறுமதிமிக்க தளபாடங்கள் 2023 ஆண்டினுள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, பூஸ்ஸ, அம்பாறை, பண்டாரவளை மற்றும் பத்தரமுல்லை தளபாட காட்சியறைகளிலிருந்து 303 ரூபா மில்லியன் (வரியுடன்) ஆன பெறுமதியுடைய தளபாடங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**2022 – 2023 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி, விற்பனை மற்றும் வருமானம்**

| | | உற்பத்தி அளவு | | விற்பனை அளவு | | மொத்த வருமானம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 (ரூ. மி) | 2023 (ரூ. மி) |
| குற்றிகள் | க. மீ | 103121 | 93,103 | 102491 | 85,378 | 3623 | 3081 |
| அரியப்பட்ட மரங்கள் | க. மீ | 3432 | 4,528 | 3441 | 2,623 | 372 | 293 |
| சிலிப்பர் கட்டைகள் | அலகு | 34113 | 22,876 | 30,969 | 31,292 | 603 | 715 |
| மின்கம்பங்கள் | அலகு | 1,837 | 7,039 | 2,312 | 4,116 | 34 | 131 |
| யானைவேலிக் கம்பங்கள் | அலகு | 10,448 | 1,056 | 11,219 | 7,451 | 71 | 62.6 |
| சுற்றுக் கம்பங்கள் | அலகு | 78,528 | 51,863 | 82,602 | 51,070 | 12 | 12 |
| விறகு | க. மீ | 93,785 | 34,930 | 75,710 | 50,319 | 69 | 69 |
| வேலிக் கம்பங்கள் | அலகு | 84,911 | 65,290 | 80,985 | 477,218 | 13 | 14 |
| தளபாடங்கள் | (ரூ.மில்) | 292 | 194 | - | - | 428 | 303 |

**இலக்குகள் மற்றும் அடைவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவக் குழுவின் மூலம் நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் வருட ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமைவானதாகும் என்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வருட இறுதியில் அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதனடிப்படையில் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் உள்ளிட்ட

ஒவ்வொரு பிரிவுடனும் தொடர்பாக தற்போது உள்ள மற்றும் ஏற்படக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக தலைவரின் தலைமையில் சகல பிரதேச முகாமையாளர்கள் மற்றும் கூட்ட,த்தாபனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்களின் பங்குபற்றுதலுடன் மாதாந்த பிரதேச முகாமையாளர்களின் கூட்டமொன்று அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தின் மூலம் நடாத்தப்படுகின்றது. நிலையற்ற கடன், அந்நியச் செலாவணியின் குறைபாடு, பணவீக்கம், உயர்வான வட்டி வீதம் மற்றும் பணத்தின் மதிப்பிழப்பு காரணமாக இலங்கையின் செயற்பாட்டுச் சூழல் இன்னும் அழுத்தத்துக்கு உள்ளாவதோடு அதன் மூலம் குடிமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் கடும் சவால்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது.

இவ்வாறான பின்னணியின் கீழ், நோக்கங்களின் மீதும் நிதி ஸ்திரத்தன்மையின் அடிப்படையில் வெளிச் சூழலில் நிகழும் மாற்றங்களுக்கு பதிலளிப்பதற்கு முயற்சி எடுப்பதோடு, அரிமரச் சந்தையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு உள்ள முதலிடத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கவனத்தைச் செலுத்தியுள்ளது. இதற்கிடையில், எமது சமூகத்திலான எமது பொறுப்புக்களை நாம் புரிந்து கொண்டுள்ளதோடு, எமது வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த பெறுமதிகளை வழங்கி அவர்களுடன் முன் நோக்கிச் செல்வதற்காக உள்ளதைத் தொடர்ந்தும் பணியாற்றுவோம்.



# எமது உள்ளடக்க வலயங்கள் இட வரைபடம் – அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



# கூட்டுத்தாபன நிர்வாகம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினுள் கூட்டுத்தாபன நிர்வாகத்தில் (Corporate governance) உயர் தரத்தில் நடத்திச் செல்வதற்கு பணிப்பாளர் சபை அர்ப்பணிப்போடு செயற்படுவதுடன், அதன் பொறுப்பு பணிப்பாளர் சபையினால் ஏற்கப்பட்டுள்ளது.

பங்குதாரர்களின் பொறுப்புக்களில் கவனத்தைச் செலுத்தியுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினுள் கூட்டுத்தாபன நிர்வாகக் கொள்கை மற்றும் பாவனைகள் திட்டமிடப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் நிறுவன ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், நுகர்வோர்கள் மற்றும் அது செயற்படுத்தப்படுகின்ற அனைத்து சமூகங்களும் உட்பட அங்குள்ள அனைத்து பங்குதாரர்களின் தேவைகளும் இனங்காணப்பட்டன. இக்கட்டுரையின் மூலம் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்படுகின்ற கூட்டுத்தாபன நிர்வாகக் கொள்கைகள், பாவனைகள் மற்றும் செயன்பாடுகள் பற்றித் தெளிவுபடுத்தப்படுகின்றது.

**பணிப்பாளர் சபையும் அதன் செயற்பாடுகளும்**

பணிப்பாளர் சபையின் மூலம் கூட்டுத்தாபனம் நிர்வகிக்கப்படுவதோடு, கூட்டுத்தாபனத்தின் வியாபார நடவடிக்கைகளை செயற்படுத்தப்படுவதும் கண்காணிப்பும் செய்யப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் ஏழு பேரைக் கொண்டுள்ளதோடு, அதில் பணிப்பாளர்கள் ஐந்து பேர் வரி அமைச்சின் அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுவதோடு, பணிப்பாளர்கள் இருவர் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படுவர். பணிப்பாளர் சபையின் சுவாதீனத்தன்மை மற்றும் விசேட அறிவு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களில் ஒரு பணிப்பாளர் நிதி அமைச்சினால் நியமிக்கப்படுவர். ஒவ்வொரு கூட்டத்துக்கு முன்னரும், முடிவுகளை செயற்படுத்துவதற்காக பணிப்பாளர்களுக்கு உரிய அனைத்து முகாமைத்துவ தகவல்களும் பின்னணித் தகவல்களும் வழங்கப்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை, புதிய முதலீடு, மூலதன கருத்திட்டம், உரிய சபையின் அனுமதி தேவையான வேறு பிரச்சினைகள் பற்றிய சபை பத்திரம் கூட்டத்துக்கு முன்னர் முன்வைக்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் ஏனைய பணிப்பாளர்கள் மற்றும் வெளிக்கள பங்குதாரர்களுடன் தொடர்ந்து தொடர்புகளைப் பேணுதல், கொள்கைகள் பற்றிய விடயங்கள் தொர்பாக தலைவர் பொறுப்புக் கூற வேண்டும். மேலும் கூட்டுத்தாபனத்தின் மொத்த வணிகம், செயற்பாடுகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தியின் சகல பிரிவுகளுக்கும் அவர் பொறுப்புக் கூற வேண்டியுள்ளதோடு, அதற்காக ஏனைய பணிப்பாளர்களினதும் மேல் முகாமைத்துவத்தின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பணிப்பாளர் சபை கூட்டங்களில் தமது பிரிவுக்குரிய விடயங்கள் கலந்துரையாடப்படும் போது மேல் முகாமைத்துவத்தின் உறுப்பினர்கள் கூட்டத்தின் இடையில் உரிய சந்தர்ப்பத்தில் முன் நிற்பர்.

**பணிப்பாளர் சபையின் பிரதான பணிகள்**

- கூட்டுத்தாபனத்தின் வியாபார மற்றும் நடவடிக்கைகளை செயற்படுத்தல்.
- கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுத் திட்டமிடலுக்கான அடிப்படையொன்றாக குறுகிய கால மற்றும் நீண்ட கால வழிமுறைகளைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தலைக் கண்காணித்தல்
- வியாபாரத்தின் பிரதான இடர்களை இனங்காணல் மற்றும் போதுமான இடர் முகாமைத்துவ அமைப்பு செயற்படுகின்றது என உறுதிப்படுத்தல்.
- உள்ளக நிர்வாகங்களில் போதுமான மற்றும் வினைத்திறன் என உறுதிப்படுத்தல்.
- வருடாந்த மூலதன மற்றும் செயற்பாட்டு வரவு செலவுத் திட்டத்தை அனுமதித்தல் மற்றும் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்

- கூட்டுத்தாபனத்தின் இறுதி நிதிக் கூற்றை அனுமதித்தல்
- சட்டம் மற்றும் விதிமுறைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தல்
- அனைத்து உடன்படிக்கைகள், கையகப்படுத்தல்கள் அல்லது சொத்துக்களை அகற்றுதல் மற்றும் மூலதன கருத்திட்டங்களை அனுமதித்தல்

திறைசேரியிலிருந்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் கூட்டுத்தாபனத்துடன் நேரடியான அல்லது மறைமுகமான பொருட் தொடர்பொன்று இன்றி சுயாதீனமாவதோடு, அப்பணிப்பாளரிடமுள்ள பரந்த அளவிலான விசேட அறிவு மற்றும் வணிக நிறுவன மற்றும் நிதிச் செயற்பாடுகள் பற்றிய கவனிக்கப்பட வேண்டிய அனுபவங்கள் பணிப்பாளர் சபைக்கு சுயாதீனமானதும் நோக்கு மற்றும் தீர்வினைக் கொண்டு வரும்.

**பணிப்பாளர் சபையின் உப குழு**

அனைத்து உப குழுக்களையும் நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல், இக்குழுக்களுக்காக உறுப்பினர்களை நியமிப்பதற்காக பணிப்பாளர் சபை பொறுப்புக் கூற வேண்டியுள்ளதோடு, பணிப்பாளர் சபையினால் அவ்வுப குழுக்களுக்காக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக் குழுப் பணிப்பாளர்கள் மூவரினைக் கொண்டுள்ளதோடு, அப்பணிப்பாளர்கள் திரு. H.P.K. பெரேரா - குழுத் தலைவர், திரு சமிந்த விக்ரமரத்ன - குழு உறுப்பினர் மற்றும் திரு சந்தன பெரேரா - குழு உறுப்பினர் ஆவர். அனைத்து பிரதி முகாமையாளர்கள் மற்றும் பிரதானிகள் தேவையான சந்தர்ப்பங்களில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வர். பக்க இல 120 இல் கணக்காய்வு குழு அறிக்கை, நிதியாண்டினுள் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

**உள்ளக நிர்வாகம் – Internal Controls**

கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக வினைத்திறனுள்ள உள்ளக நிர்வாக அமைப்பொன்றை நிறுவுதல் மற்றும் நம்பிக்கையான தகவல்கள் உருவாக்கப்படுகின்ற, சரியான மற்றும் முழுமையான அறிக்கையை நடத்திச் செல்வதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை வகிக்கின்றது. இவ்வமைப்புக்கு நிதி, செயற்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் உட்பட னைத்து நிர்வாகமும் உள்ளடக்கப்படுவதோடு, இடர் முகாமைத்துவத்துக்காக கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்பட்ட உத்திகள் பக்க இல 122 இலிருந்து 126 வரை இடர் முகாமைத்துவம் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

05 வருட காலப் பகுதியை உள்ளடக்குகின்ற உபாய வழிமுறைத் திட்டங்களுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு நிதியாண்டின் ஆரம்பத்திலும் விரிவான வரவு செலவுத்திட்ட செயன்முறையொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வருடாந்த வரவு செலவுத்திட்டம், தீர்மானமான வெற்றியின் முக்கிய காரணிகளை இனங்காண்பதன் மூலம் சகல பிரிவினாலும் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு நோக்கங்கள், சபையினால் அனுமதிக்கப்படுவதோடு, ஒவ்வொரு மாதமும் அதன் முன்னேற்றம் பரீட்சிக்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக நிர்வாக அமைப்பு வழக்கமாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதோடு, அதன் தேடல்கள் கணக்காய்வுக் குழுவினால் முதலில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவதோடு, அதன் பின்னர் கவனிக்கப்படத்தக்க பிரச்சினைகள் பணிப்பாளர் சபையிடம் அறிக்கையளிக்கப்படும். பணிப்பாளர் சபை தற்போது உள்ள உள்ளக நிர்வாக செயன்முறைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டதோடு, அதன் செயல்திறன் பற்றி திருப்தியடையும்.

**பங்குதாரர்களுடனான தொடர்பு**

பணிப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் பிரதான பங்குதாரர்களுடன் சிறந்த

உறவொன்றைப் பேணிச் செல்வதிலுள்ள முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளதோடு, முழு கூட்டுத்தாபனத்திற்குள்ளும் இதனை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனத்தினுள் உள்ளக தொடர்பாடல் பிரதானமாக மின்னஞ்சல், நிரூபங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் ஊடாக இடம்பெறும்.

கூட்டுத்தாபனத்தின் கொள்கைகள் மற்றும் பயன்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் பெறுமதிகள் மற்றும் அதன் சமூகப் பொறுப்புக்களின் பிரகாரம் என பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துவதோடு, கூட்டுத்தாபனம் தனது ஊழியர்களின் மற்றும் அமைப்புக்களில் உள்ள ஏனையவர்களின் சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தரத்தை பாதுகாத்தலை விருத்தி செய்கின்றது. உரிய செயன்முறைகள் நிறுவன சமூகப் பொறுப்புக்கள் அறிக்கையில் 127 இலிருந்து 137 வரை விவரமாகக் காட்டப்பட்டுள்ளது.

**இணக்கப்பாடு – Compliance**

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் உறுதியான உள்ளக இணக்கப்பாட்டு செயன்முறையிலான கவனிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை வழங்குவதோடு, இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்று இலங்கை கணக்கியல் தரம் (LKAS மற்றும் SLFRS) மற்றும் ஏனைய சட்ட ரீதியான விதிமுறைகளின் வழிமுறைகளுக்கு இணக்கப்பாட்டைத் தயார் செய்துள்ளது.

**இருப்பு – Going Concern**

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை மற்றும் பணப் பாய்ச்சல் நிலைமை சரியாக மீளாய்வு செய்வதன் பின்னர் பணிப்பாளர்களினால் நிதிக் கூற்று தயாரிக்கும் போது "Going Concern" அடிப்படையில் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன, கூட்டுத்தாபனத்தின் எதிர் காலத்திற்காக அதன் செயற்பாட்டினை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு போதுமான வளங்கள் உள்ளன என பணிப்பாளர் சபையின் நம்பிக்கையாகும்.



# கணக்காய்வு குழு அறிக்கை – 2023

**குழுவின் கடமைப்பொறுப்பு**
கணக்காய்வு குழு பணிப்பாளர் குழுவில் துணைக்குழு ஒன்று என்பதோடு, பணிப்பாளர் குழுவிற்குப் பொறுப்புக் கூறும் மற்றும் அறிக்கையுமிடுகின்றது.
கணக்காய்வு குழுவின் அடிப்படை கடமைப் பொறுப்பாவது நிதிப் பெறுபேறு, கட்டமைப்பு, இடர் மற்றும் உள்ளக நிர்வாகம் தொடர்பாகச் செயற்படுதல், முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுக்கு ஒத்துழைத்தல் என்பனவாகும். அது இலங்கை கணக்கியல் கொள்கைகளுக்கு, உரித்தான சட்டங்கள் மற்றும் உரிய அதிகாரிகளினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கு இணங்குவதனை உறுதிப்படுத்துகின்றது.

**அமைப்பு**
கணக்காய்வு குழு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தலைவர் உட்பட பணிப்பாளர்கள் மூவரினைக் கொண்டதாகும்.

| உறுப்பினர்களின் பெயர் | வரவு |
|---|---|
| திரு. எச். பீ. கே. பெரேரா - தலைவர் | 4/4 |
| திரு சமிந்த விக்ரமரத்ன - உறுப்பினர் | 3/4 |
| திரு சந்தன பெரேரா - உறுப்பினர் | 2/4 |

மேலும், வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், வெளிக் கணக்காய்வு (கணக்காய்வாளர் நாயகம்) கண்காணிப்பாளர்களாகக் கலந்து கொள்வர்.

பணிப்பாளர் குழுவின் செயலாளர் கணக்காய்வு குழுவின் செயலாளராகச் செயற்படுகின்றார். பணிப்பாளர் குழுவின் உறுப்பினரொருவரான திருமதி எஸ்.ஏ.சீ. குலதிலக 2023 ஒக்டோபர் மாதம் வரை கணக்காய்வு குழுவில் தலைமை வகித்தார். திருமதி குலதிலக அவர்களினால் கணக்காய்வு குழுவின் தலைவராக கடமையாற்றிய காலத்தினுள் குழுவிற்கு அவர் வழங்கிய பெரும் ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனை பற்றி மனப்பூர்வமான பாராட்டுக்களை இங்கு தெரிவிப்பதற்கு விரும்புகிறோம்.

**கூட்டங்கள்**
மீளாய்வாண்டினுள் கணக்காய்வு குழு கூட்டங்கள் நான்கு (04) நடைபெற்றன.

இச்சந்தர்ப்பத்துக்கு அழைப்பின் பெயரில் பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் (நிதி), பிரதி பொது முகாமையாளர் (மனித வளங்கள்), பிரதி பொது முகாமையாளர் (உற்பத்தி மற்றும் தொழிநுட்பம்) பதில், பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) மற்றும் பிரதி

**மீளாய்வு ஆண்டினுள் கணக்காய்வு குழுவின் பிரதான செயற்பாடுகளின் சாராம்சம்**
2023 இனுள் கணக்காய்வு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் கீழுள்ளவாறாகும்.

**நிதி அறிக்கையிடல்**
இடர்கள், நிர்வாகம் மற்றும் நிர்வாக செயன்முறை பற்றிய சுயாதீனமான மீளாய்வொன்றின் ஊடாக நிதிக் கூற்றுக்களில் நம்பகத்தன்மை பற்றிய உறுதிப்பாட்டினை வழங்குவதற்காக, கணக்காய்வு குழுவின் அடிப்படைப் பணிக்கு உரித்தான, அதன் அனுமதிக்காக குழுவிற்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்கு முன்னர் பதில் பிரதி பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) உடன் கலந்துரையாடப்பட்டு வருடாந்த நிதிக் கூற்று மீளாய்வு செய்யப்பட்டது.

**உள்ளகக் கணக்காய்வு**
பதில் கடமையாற்றுகின்ற பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) தலைமை வகிக்கின்ற

கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் கணக்காய்வு குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. பிரிவின் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்து குழுவின் அனுமதிக்காக கணக்காய்வு குழுவினால் பரிந்துரை செய்யப்படும். உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகையை வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு எதிராக வருடாந்த அடிப்படையில் கணக்காய்வு குழுவினால் அனுமதிக்கப்படும். பதில் கடமையாற்றுகின்ற பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) நிர்வாக சிக்கல்கள் மற்றும் பரிந்துரைகளை விவரிக்கும் குறிப்பிட்ட கால அறிக்கைகளை கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்படுவதோடு கடந்த கால மற்றும் தற்கால பரிந்துரைகள் பற்றிய பின்தொடர்தல் செயன்முறைகள் கண்காணிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு அறிக்கைகள்/பணிகளை 41 மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டதோடு செயன்முறைக்காக பரிந்துரைகளுடன் பிரதான விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பிரிவினால் வெளிக் கணக்காய்வு சிக்கல்கள் பற்றி மீளாய்வு பற்றிய பின்தொடர்தல் நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பு செய்து புதுப்பிக்கப்பட்டது.

**இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக நிர்வாகம்**

மீளாய்வாண்டினுள் உள்ளக கணக்காய்வு மற்றும் வெளிக் கணக்காய்வு (கணக்காய்வாளர் நாயகம்) இனால் வழங்கப்பட்ட அறிக்கைகள் கணக்காய்வு குழுவினால் கண்காணிக்கப்பட்டது.

**வெளிவாரிக் கணக்காய்வு**

வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் வெளிக் கணக்காய்வாளரின் அறிவுறுத்தலுடன் தயாரிக்கப்பட்டது. ஆண்டினுள் வெளிவாரிக் கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்புகள் அடிக்கடி மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, கணக்காய்வு குழுவின் கூட்டங்களில் மேலும் விருத்தி செய்வதற்காக வெளிக் கணக்காய்வாளருடன் விரிவான கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது.

**முடிவுரை**

கூட்டுத்தாபனத்தின் நிதி நடவடிக்கைகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் தரநிலைகளுக்கு ஏற்ப முகாமை செய்யப்படும் என்பதற்கு நியாயமான உறுதிப்பாடொன்றை வழங்குவதற்கு, கூட்டுத்தாபனத்தின் கணக்கியல் கொள்கைகள், உள்ளக நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகள் போதுமானவை என கணக்காய்வுக் குழு என்ற வகையில் திருப்தியடைய முடிகின்றது.

கணக்காய்வு குழு சார்பாக,

**எச்.பீ.கே. பெரேரா**

தலைவர் - கணக்காய்வுக் குழு

# இடர் முகாமைத்துவம்

நிலைபேறான வளர்ச்சியைப் போன்றே நிறுவன நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளும் நிரந்தர செயன் முன்னேற்றமொன்றை அடைந்து கொள்வதற்காக வியாபார மற்றும் நிதி ஆபத்து முகாமைத்துவம் முதன்மையாக முக்கியமாக உள்ளது. "ஆபத்தை" முழுமையாக "இல்லாமல் ஆக்குவதற்கு" முடியாத சாதகமொன்றாக உள்ளதுடன், தொடர்ச்சியாக மீளாய்வு மற்றும் தந்திரோபாயங்களைப் பின்பற்றி ஆபத்தைக் "குறைப்பதற்கு" கூட்டுத்தாபனம் உறுதியாக நிற்கின்றது. இந்த இலக்கை அடைந்து கொள்வதற்காகப் பல்வேறு வகைகளில் தந்திரோபாயங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

**ஆபத்தான சூழல்**

2023 ஆம் ஆண்டு நிதியாண்டு மிகவும் சவாலான ஆண்டாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திறனான தலைமைத்துவத்துடன் மரவளங்களை வினைத்திறனாக முகாமை செய்வதன் ஊடாக இந்த நிச்சயமற்ற நிலையைத் தவிர்த்து எமது அடிப்படை வியாபாரத்துடன் பலமாக வளர்ச்சியடையும் என்பது எமது நம்பிக்கையாகும். மேலும் பல்கைப்படுத்தலான கைத்தொழிலில் இருத்தல் மற்றும் ஆபத்து முகாமை செயற்பாட்டின் போது கூட்டுத்தாபனத்துக்குப் பலமாக இருந்ததுடன் பொருளாதார பின்னடைவுப் பின்னணியில் இருந்த போதும் நிலையான முன்னேற்றமொன்றைப் பெற்றுக் கொண்டோம்.

**ஆபத்து கட்டுப்பாடு**

ஆபத்து முகாமைத்துவம் பணிப்பாளர் சபையின் முக்கிய பொறுப்பாக இருப்பதுடன் ஆபத்து முகாமை தொடர்பாக மேற்பார்வை பொறுப்புள்ள கணக்காய்வு குழுவொன்றினால் இதற்கான பணிப்பாளர் சபைக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. ஆபத்துக்களை இனங்காணுதல், மதிப்பீடு, முகாமைத்துவத்தைக் குறைத்தல் மற்றும் ஆபத்தைக் கண்காணித்தல் உட்பட உள்ளகக் கணக்காய்விற்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அபாயங்களை அறிக்கையிடுவதற்கும் ஒவ்வொரு பிரிவுத் தலைவரும் பொறுப்பிற்குக் கட்டுப்பட்டவராக இருப்பர்.

**ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு**

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் ஆபத்து முகாமைத்துவச் செயற்பாடு எல்லா வகையிலும் வியாபார மற்றும் நிதி ஆபத்து முறையாக இனங்காணுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பதிலளித்தல் என்பன உறுதிப்படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடு ஆபத்துக் கட்டுப்பாட்டு நடைமுறைக்கு வசதிகளை வழங்குவதுடன் வியாபாரத்தின் அனைத்துப் பிரிவிலும் ஆபத்து உருவாவதற்கு முன்னர் ஆபத்துக்களை இனங்காணக்கூடிய கலாசாரத்தினை (Risk aware culture) ஏற்படுத்தி போதியளவு ஆபத்துக்களை மதிப்பீடு செய்தல், இனங்காணுதல் மற்றும் குறைத்தல் என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

1. **ஆபத்துக்களை இனங்காணுதல்**

   நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உதவும் அல்லது தவிர்க்கும்/ தடைகளை ஏற்படுத்தும் ஆபத்துக்களைக் கண்டுபிடித்தல், இனங்காணுதல் மற்றும் விபரப்படுத்தலே ஆபத்தை இனங்காணுதலின் நோக்கமாகும். ஆபத்தை இனங்காணும் போது வியாபாரத்துக்குரிய போதுமான சாத்தியக் கூறுகள், நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் முக்கியமாக இருப்பதுடன் நோக்கங்கள் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அளவில் தாக்கமளிக்கும் நிச்சயமற்ற தன்மையை இனங்காண்பதற்காக நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட நடைமுறைகளைப் பயன்படுத்த முடியும்.

## 2. ஆபத்துப் பகுப்பாய்வு

ஆபத்துப் பகுப்பாய்வின் அடிப்படை நோக்கம் ஆபத்தின் தன்மை மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் தாக்கமளிக்கும் அளவு உட்பட இலட்சணங்களை விளங்கிக் கொள்வதாக இருப்பதுடன் ஆபத்து பகுப்பாய்விற்கு, நிச்சயமற்ற நிலைமை, ஆபத்தின் பின்விளைவுகள், ஆபத்து மூலங்கள், மாதிரிகள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள், கட்டுப்பாடுகள் மற்றும் அவற்றின் செயற்திறன் தொடர்பாக விபரமாக பகுப்பாய்வுகள் உள்ளடங்கும். தரவுகளின் பல்வேறுபட்ட தன்மை, சிக்கலான நிலைமை, பகுப்பாய்வின் நோக்கங்களின் அடிப்படையில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமை மற்றும் நம்பகத்தன்மை மற்றும் காணப்படும் வளங்கள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படலாம். சந்தர்ப்பம் அல்லது நிலைமையின் அடிப்படையில் மற்றும் பாதுகாப்பின் பேரில் பகுபாய்வுத்திறன் முறைமைகள் தரமான பொருண்மையான அல்லது இதன் கலப்பு ஆகும்.

## 3. ஆபத்தின் மதிப்பீடு

தீர்மானம் எடுக்கும் மதிப்பீட்டிற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல், ஆபத்து மதிப்பீட்டின் அடிப்படை நோக்கமாகக் குறிப்பிடலாம். ஆபத்துப் பகுப்பாய்வின் பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட ஆபத்து நியதிகள் என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டுக் கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆபத்து முகாமைத்துவத்திற்காக மேலதிக நடவடிக்கைகளின் தேவைப்பாடு இனங்காணல் மதிப்பீட்டு செயற்பாட்டில் உள்ளடங்கும். அத்தீர்மானங்கள் பின்வருமாறு

- எவ்வித நடவடிக்கையும் எடுக்காமை
- ஆபத்துக்கான சிகிச்சை முறைகளைக் கருத்திற் கொள்ளுதல்
- ஆபத்தின் தாக்கங்களை மேலும் விளங்கிக் கொள்வதற்காக கூடுதலாகப் பகுப்பாய்வு செய்தல்
- காணப்படும் கட்டுப்பாடுகளைப் பேணிச் செல்லல்
- நோக்கங்களை மீண்டும் கருத்திற் கொள்ளல்

## 4. ஆபத்துக்களுக்கான சிகிச்சை

ஆபத்துக்களுக்கான சிகிச்சை செயற்பாட்டின் நோக்கம் ஆபத்தை தீர்வு செய்வதற்காக மாற்று வழிகளை இனங்கண்டு செயற்படுவதாகும். அது கீழே காட்டப்பட்டுள்ளவாறு புனரமைப்புச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- ஆபத்துக்கான சிகிச்சைக்காக மாற்றுவழி தயாரித்தலும் தெரிவு செய்தலும்
- தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திட்டங்கள் மற்றும் செயற்படுத்தல்
- செயற்படுத்தப்பட்ட சிகிச்சை செயற்திறனை மதிப்பீடு செய்தல்
- எஞ்சிக் காணப்படும் ஆபத்தின் தாக்கம் நிறுவனத்திற்கு ஏற்றுக் கொள்ள முடியுமா எனத் தீர்மானித்தல்
- ஏற்றுக் கொள்ள முடியாதெனின் மேலும் சிகிச்சை முறைகளை செயற்படுத்தல்

## ஆபத்து வெப்ப வரைபடம் (Risk Heat Map)




| ஆபத்து வெளிப்பாடு | நோக்கங்கள் | ஆபத்தைக் குறைக்கும் தந்திரோபாயங்கள் |
|---|---|---|
| **நிதி ஆபத்து முகாமைத்துவம்** | | |
| 1. திரவத்தன்மை மற்றும் நிதி முகாமைத்துவம் | சந்தை வாய்ப்புக்களுக்கு வேகமாக பொறுப்பேற்றல் தெரிவிக்கும் உறுதிப்படுத்துவதற்காக உடனடி நிதியை வழங்கும் இயலுமையை உறுதிப்படுத்தல் | நீண்ட கால கடன் மூலம் நீண்ட கால சொத்துக்களுக்கான நிதியத்தை வழங்கல் |
| | எப்போதும் “போதியளவு” திரவத் தன்மை மட்டத்தைப் பேணிச் செல்லல் | கூட்டுத்தாபனம் எப்போதும் குறுங்கால கடன் பெறும் வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் |
| | | செலவின கட்டுப்பாட்டிற்காக நிதி அதிகாரம் பெறுமதி அடிப்படையில் பகிரப்பட்டுள்ளன |
| | | எதிர்கால நிதித் தேவைப்பாட்டிற்காக உத்தரவாதமளிக்கக்கூடியவராக சமர்ப்பிக்கக் கூடிய புத்தகப் பெறுமதியை விட கருத்திற் கொள்ளக் கூடிய சந்தை பெறுமதியுடனான காணி மற்றும் கட்டிடங்கள் கூட்டுத்தாபனத்திடம் காணப்படுகின்றன. |
| | | வெவ்வெறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதித் தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளல் |

| | | |
|---|---|---|
| | உறுதியற்ற வட்டி வீதத்தின் பாதகமான தாக்கத்தைக் குறைத்தல் | கூட்டுத்தாபனத்தின் முதலீட்டுக்காக முடியுமான வரை முடியுமான அளவு வட்டி வீதத்தை பெற்றுக் கொள்வதற்காக வங்கியுடன் கலந்துரையாடல் |
| **2. வட்டி வீத ஆபத்து** | கடன் எடுத்தல் கிரயத்தை குறைந்த மட்டத்தில் பேணுவதை உறுதிப்படுத்துதல் | உயர் கிரயத்தைக் குறைக்கக் கூடிய வகையில் உள்நாட்டு வட்டி வீதங்களில் பாதகமான தளம்பல்களைத் தவிர்ப்பதற்காக வழங்குனர்களிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளல் மற்றும் கலந்துரையாடல் |
| | பங்கின் மீதான இலாபத்தை உச்சப்படுத்தல் | குறைந்த gearing வீதத்தை பேணிச் செல்ல மற்றும் விளைவுள்ள பயனுள்ள மூலதன முகாமைத்துவம் |
| **வியாபார ஆபத்து முகாமைத்துவம்** | | |
| | | கடன் கொள்கையை அபிவிருத்தி செய்தல் மற்றும் குறைத்தல் |
| | | அனைத்து பிரதான வாடிக்கையாளர்களுக்கும் வங்கி பிணை பொறுப்பு மற்றும் வைப்புகளை மற்றும் பிணைகளைப் பெற்றுக் கொள்ளல் |
| **3. கடன் ஆபத்து** | கடன்பட்டோர் கடன் தவிர்ப்பினை சார்ந்த ஆபத்தைக் குறைத்தல் | கடன் வழங்குவதற்கு முன்னர் வாடிக்கையாளரின் கடன் வழங்கும் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக கூடுதலான மதிப்பீடு செய்யும் செயற்பாட்டை பின்பற்றுதல் |
| | | கடன்பட்டோரின் மீதிகளை அண்மித்து மேற்பார்வை செய்தல் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் மற்றும் அச்செயல் நடவடிக்கைத் திட்டம் எதிர்பார்த்த வகையில் செயற்படுவதை உறுதிப்படுத்தல் |
| | | சகல தொட்டுணரக் கூடிய சொத்துக்களுக்கும் விரிவான காப்புறுதி மேவுகை பெற்றுக் கொள்ளல் |
| **4. சொத்துக்கள் ஆபத்து** | தீயினால், திருட்டினால் மற்றும் இயந்திர உபகரணங்கள் பழுதடையும் ஆபத்துக்களைக் குறைத்தல் | கட்டாய தவிர்ப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துதல் |
| | | தீயணைப்பு போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தல். |
| **5. உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய ஆபத்துக்கள்** | கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக போதியளவு உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றைப் பேணுதல் | முறைமைக் கணக்காய்வு, இருப்பு மற்றும் பணத்தை கணக்கிடல் உட்பட சகல கணக்காய்வுப் பிரிவினால் செயற்படும் கட்டுப்பாட்டுப் பொறிமுறையொன்றினால் செயற்படுத்தல். |
| | | கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலின் இலக்குகளுக்கு இணங்குவதாக உறுதிப்படுத்துவதற்காக பாதீட்டு செயற்பாட்டிலும் பாதீட்டு கட்டுப்பாட்டு செயன்முறையொன்றைச் செயற்படுத்தல். |

| | | |
|---|---|---|
| 6. நன்மதிப்பும் தொடர்புடைய ஆபத்தும் | நன்மதிப்பிற்குத் தாக்கம் ஏற்படுத்தும் காரணிகள் உருவாகுவதைத் தவிர்த்தல் | உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்காக தொடர்ச்சியான பயிற்சி, தரத முகாமைத்துவம் மற்றும் சான்றுறுதிப்படுத்தும் நிகழ்ச்சிகளை செயற்படுத்தல் |
| | எமது செயற்பாட்டுக்குப் புறம்பாக நன்மதிப்பு தொடர்பான நெருக்கடியொன்று ஏற்பட்டால் அதன் தாக்கத்தைக் குறைத்தல் | அவ்வப்போது உள்ளக மற்றும் வெளிவாரி தரப் பரிசோதனை மேற்கொள்ளல் |
| | | உற்பத்தி வசதிகளுக்காக தொடர்ச்சியான முதலீட்டு மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல் |
| | | வெளிவாரி தரக் கட்டுப்பாட்டு நிறுவனங்கள் மூலம் உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்ளல் |
| | | தரப்படுத்தப்பட்ட உற்பத்தி செயற்பாடுகள் |
| 7. மனித மூலதனமும் தொழிலாளர் ஆபத்தும் | தடையின்றி தொடர்ச்சியான தொழிற்பாட்டு செயற்பாட்டை உறுதிப்படுத்தல் | ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் நலன்புரி செயற்பாடுகள் மூலமும் ஊழியர் நலன்களை விரிவுபடுத்தல் |
| | ஒரு மானிட எஜமானாக என எம்மை ஈர்த்தல், ஊக்கச் செயற்பாட்டினை வெற்றிகரமாக நிறைவேற்றல். அபிவிருத்தி செய்தல், தக்க வைத்தல் மற்றும் தரமான ஊழிய மூலதனத்தை ஈர்த்தல் | ஊழியர் ஆட்சேர்ப்பு, செயலாற்றல் மதிப்பீடு மற்றும் உள்ளக மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகள் தொடர்பான மனிதவளப் பிரிவின் செயற்பாடுகளை மேம்படுத்தல் |
| | | செயலாற்றல் அடிப்படையிலான கலாசாரமொன்றை கூட்டுத்தாபனத்தில் பேணுதல் |
| 8. தொழில்நுட்ப ஆபத்து | தற்போதைய தொழிநுட்ப வளர்ச்சியுடன் இணைந்து செயற்படல் மற்றும் காலாவதியானவைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல் | புதிய தொழிநுட்பம் மற்றும் தானியங்கி செயற்பாட்டுக்காக தொடர்ச்சியான முதலீடு |
| | | ஆண்டு பூராகவும் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக முதலீடு செய்தல் |
| 9. சந்தை போட்டி ஆபத்து | எமது சந்தைப் பங்கை உச்சப்படுத்தல் | உயர் தரமாக உற்பத்தியை சந்தைக்கு வழங்குதல் |
| | அடிப்படை உற்பத்திகளின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் | கூறு விலைகளில் போட்டித் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தி செயற்திறன் மற்றும் வினைதிறனை அதிகரித்தல் |
| | | தேவைப்பாடுகளை இனங்காண்பதற்காக சந்தை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் |
| | | சந்தை பிரசித்தப்படுத்தல் மற்றும் இலக்கு விற்பனை மூலம் கூட்டுத்தாபனத்தின் இருப்பை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளல் |
| | | காட்சிக் கூடங்களில் வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவ சேவை நிகழ்ச்சிகளை நடத்துதல் |
| 10. சுற்றாடல், அரசியல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆபத்து | எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளிச் சூழலில் ஏற்படக் கூடிய எதிர்த்தாக்கங்களைக் குறைத்தல் | ஊழிய அதிகாரிகளினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்குதல் மற்றும் இணங்குதலை உறுதிப்படுத்துதல் |
| | ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டிற்கு இணங்குதல் | சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கு முறை நிறுவனங்களின் தேவைப்பாட்டுடன் இணங்கிச் செல்லல் |

# நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு

ஒரு பொறுப்புள்ள அரசாங்க நிறுவனமாக, அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரி தரப்பினரதும் தற்போதைய மற்றும் எதிர்கால நிலைத்திரு தன்மையும் எங்களது நிலைத்திரு தன்மைக்கு அத்தியாவசியமான காரணி என்பது எங்களது நம்பிக்கையாகும். அதற்கிணங்க மர வியாபாரத்தை மேலும் பொறுப்புடனும் நிலைபேறானதாகவும் அபிவிருத்தி செய்வதற்கும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் புதிய தந்திரோபாயங்களை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.




**கன்றுகளைப் பகிர்ந்தளித்தலும் மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான ஒத்துழைப்பு**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 14 பிராந்தியங்களில் நடத்திச் செல்லப்படுகின்ற 28 நாற்றுமேடைகளின் மூலமாகவும் பெறுமதி மிக்கவும் ஏனைய இனங்களிலுமான நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுவதோடு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு இலவசமாகக் கன்றுகள் வழங்கப்படுகின்றன. மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் மர இனங்களைப் பிரச்சாரம் செய்வதன் ஊடாக உள்நாட்டு மரக் கைத்தொழிலை நிலைபெறச் செய்வதற்கும் உயிர்ப் பல்வகைத்தன்மையை விருத்தி செய்வதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கின்றது. மேலும், தாவர சமூகம் சார்ந்த காபன் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் காலநிலை சீர்கேடுகளுக்கு தீர்வைத் தேடுதல், நாட்டில் வனப் போர்வையை அதிகரித்தல் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை உறுதிப்படுத்தல் இந்நிகழ்ச்சித் திட்டங்களின் பிரதான நோக்கங்களாகும். நிலையான அபிவிருத்தி இலக்குகளில் (SDGs) எமது பகுதியான நிலையான மர உற்பத்தியில் அடிப்படையில் மரம் (பொருள்) நுகர்வினை அதிகரித்தல், கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒத்துழைப்பினை வழங்குதல் போன்றவற்றில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியுள்ளதோடு கன்றுகள் உற்பத்தி மற்றும் மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அனுசரனையை வழங்குவதன் மூலம் சூழல் பாதுகாப்பு தொடர்பான நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதற்கு நாட்டுக்கு ஒத்துழைப்பினை வழங்குவதும் இடம்பெறுகின்றது.

2023 ஆம் ஆண்டில் வெவ்வேறு மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 39,226 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதோடு 2023 ஆம் ஆண்டில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின்

நாற்றுமேடைகளின் மூலம் 37,500 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விசேடமான சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

- சூழல் பாதுகாப்பு பிரிவு, இலங்கை பொலிஸ் - 12500 கன்றுகள்
- சுற்றாடல் அமைச்சு - 5000 கன்றுகள்
- வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு - 2000 கன்றுகள்
- இலங்கை கடலாமைகள் பாதுகாப்பு கருத்திட்டம் (SLTCP) - 3000 கன்றுகள்
- தேவகிரி ரஜமகா விகாரை, பிங்கிரிய - 2000 கன்றுகள்
- குருமடல கனிஷ்ட பாடசாலை (பண்டாரவளை) - 1000 கன்றுகள்
- பிரதேச செயலகம் (மாதம்பாகம) - 500 கன்றுகள்




75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்காக இலங்கை பொலிஸில் சூழல் பாதுகாப்புப் பிரிவுக்காக கன்றுகளை அன்பளிப்பு செய்தல்




விவசாயிகளுக்கு கன்றுகளை அன்பளிப்பு செய்தல்

**'The Little Forester Program" சிறிய வன விஞ்ஞானி – 2023**

வன வளங்கள் நிலையான முகாமைத்துவம் உலகம் முழுவதும் சூடான தலைப்பொன்றாகும். இலங்கைச் சமூகம் சூழல் பாதுகாப்பு பற்றி முக்கிய கவனத்தைச் செலுத்துகின்றது எனினும், நிலையான எண்ணக்கருவை நன்றாக விளங்கிக் கொள்ளப்படவில்லை. அதனால், தொடர்ச்சியான கண்காணிப்புடன் "நிலையான" எண்ணக்கருவை கருப்பொருளாகக் கொண்டு மிகவும் பயனுள்ள நிகழ்ச்சித் திட்டமொன்றை ஒழுங்கு செய்வது முக்கியமானதாகும்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை விஞ்ஞான அபிவிருத்தி சங்கத்தின் (SLAAS) B பிரிவு (விவசாய மற்றும் வன விஞ்ஞானம்) உடன் ஒன்றிணைந்து 'The Little Forester Program 2023" ஏற்பாடு செய்தது. இலங்கையில் வன பாதுகாப்பு திணைக்களமும் இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒத்துழைத்தது. நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இலகுவாகப் பிரவேசிக்க முடியுமான குழுவாக இருப்பது பாடசாலை மாணவர்கள் என இனங்காணப்பட்டுள்ளதோடு அதன்படி அம்மாணவர்களை இலக்காகக் கொண்ட மரநடுகை, அவற்றின் பராமரிப்பு மற்றும் அது பற்றிய அறிக்கையினைத் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

**வதுபிடிவல – யடியன கனிஃஷ்ட வித்தியாலயத்தில் "The Little Forester Program 2023"**

2023 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித்திட்டம் வதுபிடிவல யடியன கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மரநடுகை செயற்பாடுகளைத் தவிர, அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடுகளின் தொகுப்பொன்றை (நிலையான வன முகாமைத்துவம், உயிர்ப் பல்வகைத்தன்மை, அபூர்வமான மர நிர்மாணக் கலை, வெவ்வேறான மர இனங்களைப் பற்றிய பத்திரங்கள்) பாசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன. பாடசாலை மாணவர்களினால் நடப்பட்ட கன்றுகள் குறைந்த பட்சம் ஆறு மாதங்களாவது பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு அனைத்து பராமரிப்புகள் / கண்காணிப்புகளை வழங்கியுள்ளதோடு துறைக் கைப்புத்தகத்தில் பதிவிட வேண்டும்.




வதுபிடிவல - யடியன கனிஷ்ட வித்தியாலயத்தில் "The Little Forester" நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்.

**உள்ளக பயிற்சி நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்**

பல்வேறு நிகழ்ச்சிகளினூடாக ஊழியர்களின் நிபுணத்துவத்தை விருத்தி செய்வதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உயர்ந்தபட்ச முயற்சியை எடுக்கின்றது. மர தொழிநுட்ப பயிற்சி நிறுவனம் (TTTI) எனும் கூட்டுத்தாபனத்தின் பயிற்சி நிறுவனம் ஆவதோடு அது பாரிய பரப்பளவில் பயிற்சியை வழங்குகின்றது. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) கீழ் மர தொழிநுட்ப பயிற்சி நிலையம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு, லக்கம் 01/0365).

| பயிற்சி நிகழ்ச்சி | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | இலக்குக் குழுக்கள் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மரத்தை மெருகூட்டுதல் | 01 | மரத்தை மெருகூட்டுபவர்கள் / உற்பத்தி உதவியாளர்கள் / உற்பத்திப் பிரிவின் முகாமையாளர்கள் | 29 |
| போக்குவரத்துமுகா மைத்துவம் | 01 | நிதிப் பிரிவின் அதிகாரிகள் | 03 |
| 2023 பாதீட்டின் அடிப்படையில் அண்மைக்கால வரிகள் மாறுபடுதல் | 01 | போக்குவரத்து பிரிவின் அதிகாரிகள | 04 |
| Advance Excel | 01 | நிதிப் பிரிவின் அதிகாரிகள் | 04 |
| விசாரணை | 01 | விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் | 02 |
| Microsoft Azro A2 900 Az 104 | 01 | தகவல் தொழிநுட்ப பிரிவின் அதிகாரிகள் | 01 |
| Forest Inventory | 01 | பிராந்திய முகாமையாளர்கள் | 10 |
| Chainsaw பயிற்சி | 03 | சங்கிலி வாள் இயக்குனர்கள், உதவி பிராந்திய முகாமையாளர்கள், வேலைத்தள அதிகாரிகள், வலயங்களின் கள உதவியாளர்கள் | 145 |
| டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் வலையமைப்பு நிர்மாணம் | 01 | தகவல் தொழிநுட்பப் பிரிவின் அதிகாரிகள் | 01 |
| உற்பத்தித்திறன் மற்றும் உந்துதல் | 01 | பூஸ்ஸ வளாகத்தின் ஊழியர்கள் | 98 |
| மின்சார பழுதுபாரத்தல்களை மேற்கொள்ளல் மற்றும் மின் இணைப்புக்களைப் பராமரித்தல் | 01 | மின்சார வல்லுனர்கள் | 03 |
| Certificate in Advanced MS office 2021 | 01 | முகாமையாளர் (நிதி) | 01 |
| உள்ளக கணக்காய்வு | 01 | உள்ளக கணக்காய்வு பிரிவின் அதிகாரிகள் | 23 |
| Auto Electronics & programming | 01 | பொறியியல் உதவியாளர் மற்றும் தொழில் வல்லுனர்கள் | 05 |

| பயிற்சி நிகழ்ச்சி | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | இலக்குக் குழுக்கள் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொதிகலன் செயல்முறை | 01 | கொதிகலன் இயக்குனர்கள் | 02 |
| ஏற்றுமதி செயன்முறை | 01 | உதவி முகாமையாளர் | 01 |
| தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் தொழில்துறைப் பாதுகாப்பு | 01 | பிரதி முகாமையாளர் | 01 |
| தனிப்பட்ட கோவைப் பயன்பாடு | 01 | முகாமைத்துவ உதவியாளர்கள் | 56 |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா | 01 | தயாரிப்பு உதவியாளர்கள் | 01 |
| தர பகுப்பாய்வுக்கான MS Excel பயன்பாடு | 01 | வெவ்வேறான பதவிகளிலான அதிகாரிகள் | 07 |
| தொழிற்சாலைகளுக்காக ERP | 01 | உதவி முகாமையாளர்கள்/ முகாமைத்துவ உதவியாளர்கள் | 07 |
| தொலைபேசித் திறன்கள் மற்றும் பயிற்சி கண்ணிய முறைமைகள் | 01 | தொலைபேசி செயற்பாட்டாளர்கள் | 01 |
| NVQ உரிய பயிற்சிகள் | 01 | தச்சர்கள் | 27 |
| டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 01 | பிரதி முகாமையாளர்கள் | 01 |
| வருமான வரியைக் கணக்கிடுதல் | 01 | நிதிப் பிரிவின் அதிகாரிகள் | 02 |
| MS உடன் வியாபார பகுப்பாய்வு | 01 | நிதிப் பிரிவின் அதிகாரிகள் | 02 |
| Business Analysis with MS | 01 | Officers of Finance division | 02 |
| தமிழ்மொழி நிபுணத்துவம் | 06 | நிறைவேற்று மற்றும் நிறைவேற்றல்லாத அதிகாரிகளின் வெவ்வேறான பதவிகள் | 300 |
| நடைமுறைக் கருத்திட்ட செயலமர்வு | 01 | முகாமையாளர்கள் (தகவல் தொழிநுட்பம்) | 01 |
| Aws cloud practitioner மற்றும் Architect Associate | 01 | தகவல் தொழிநுட்ப பிரிவின் அதிகாரிகள் | 03 |
| சைபர் பாதுகாப்பு | 02 | நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத அதிகாரிகளின் வெவ்வேறு பதவிகள் | 244 |
| இருப்பு முகாமைத்துவம் | 01 | முகாமைத்துவ உதவியாளர்கள் | 50 |
| விஞ்ஞான மற்றும் வினைத்திறனானதுமான வாகனம் செலுத்துதல் | 01 | சாரதிகள் | 08 |

| | | | |
|---|---|---|---|
| முதுமாணிப் பட்டம்/ பட்டம்/ முதுமாணிப் பட்ட டிப்ளோமா/ சான்றிதழ் (ஊழியர்களின் தனிப்பட்ட விருப்பின் அடிப்படையில் வெளி நிறுவனமொன்றினால் வழங்கப்படும்) | 11 | வெவ்வேறு பதவிகள் | 11 |
| மொத்தம் | **51** | | **1054** |

**2023 ஆம் ஆண்டில் மொத்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை: 51**

**மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை – 1054**

**மொத்த செலவு – ரூ. 2,837,557/=**



உள்ளகக் கணக்காய்வு செயலமர்வு



தமிழ்மொழி நிபுணத்துவ செயலமர்வு

**வெளிப் பயிற்சிகள் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள்**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரச மற்றும் தனியார் பிரிவினருடன் தொடர்புபட்டு அரிமர மற்றும் வனச் செய்கை சார்ந்த விடயங்கள் பற்றி அறிவூட்டும் பணிகளில் ஈடுபட்டது. அரிமர தொழிநுட்ப பயிற்சி நிறுவனம் (TTTI) வெளிப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கான முக்கியமான கடமையொன்றினை நிறைவேற்றுகின்றது. வெளி நபர்களுக்காக வழங்கப்பட்டுள்ள பயிற்சி சந்தர்ப்பங்கள் கீழுள்ளவாறு ஆகும்.

| நிறுவனம் | மாணவர்கள்/ ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| இராணுவ வளங்கள் நிலையம் | 21 |
| ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - மாணவர்கள் | 103 |
| இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவனம் | 37 |
| திருகோணமலை கடற் படை முகாம் - கடல் மற்றும் சமுத்திர விஞ்ஞான பீடம் | 25 |
| தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் | 01 |
| மொரட்டுவை பல்கலைக்கழகம் - வாஸ்து விஞ்ஞான பீடம் | 50 |
| இலங்கை தொழிற்சாலை அபிவிருத்தி சபை | 19 |
| அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் (பண்டாரவளை) - திரு. விபுல சாந்த | 01 |
| இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவனம் - கம்பஹா | 25 |
| தாவர விஞ்ஞான திணைக்களம் - ரஜரட்ட பல்கலைக்கழகம் | 39 |
| ருஹுணு பல்கலைக்கழகம் - தொழிநுட்ப பீடம் | 15 |
| இராணுவ வளங்கள் நிலையம் | 40 |
| தொழிற்சாலை அபிவிருத்தி திணைக்களம் - வயம்ப மாகாணம் | 06 |
| இலங்கை வான் படை தலைமையகம் | 06 |
| ருஹுணு பல்கலைக்கழகம் - விவசாய விஞ்ஞான பீடம் | 29 |
| இலங்கை வன விஞ்ஞான நிறுவனம் | 55 |
| மொத்தம் | **472** |





ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கான அரிமரப் பாதுகாப்பு மற்றும் அரிமரத் தொழிநுட்பம் பற்றிய பயிற்சி - கெப்பெடிபொல





இலங்கை இராணுவத்தினருக்கான அரிமரத்தை இங்காணுதல் பற்றிய பயிற்சி

### NVQ மதிப்பீடுகளுக்கான பங்களிப்பு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் அரிமர தொழிநுட்பப் பயிற்சி நிறுவனம் (TTTI) தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை (NAITA) உடன் தொடர்பு கொண்டு தச்சுத் தொழிலாளர்களுக்காக தேசிய தொழிற் தகைமைகளுக்கான இறுதிப் பரீட்சைகளில் NVQ 3 ஆம் கட்டம் மற்றும் 4 இல் இறுதி மதிப்பீடுகள் இடம்பெறும். இறுதிப் பரிசோதனைக்குத் தேவையான மூலப்பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பயிற்சி இடங்களை வழங்குவதனால் NAITA வினால் பெயரிடப்பட்ட மாணவர்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கும் வசதிகள் வழங்கப்படும். 2023 இல் 107 மாணவர்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டனர்.

### 2023 இல் அரிமரம் சார்ந்த ஆய்வுக் கல்வி நடவடிக்கைகள்

ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவினால் அரிமரம் சார்ந்த ஆராய்ச்சி பல கல்விகள் இடம்பெற்றதோடு அவை சஞ்சிகைககள் மற்றும் மாநாட்டு சாராம்சம் மற்றும் மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளாக பிரகடனப்படுத்தப்பட்டன. இக்கல்விகளில் கண்டுபிடிப்புக்கள் அரிமரம் மற்றும் வன விஞ்ஞானம் பற்றி மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்குப் போன்றே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் துறைப் பயன்பாடுகளில் பாவனைக்காக மிக முக்கியமானதாகும்.

கீழே காட்டப்படுவது பிரகடனப்படுத்தப்பட்ட கல்விகளாகும்.

### பத்திரிகை ஆராய்ச்சிப் பத்திரங்கள்


C.K. Muthumala, Sudhira De Silva, K. K. I. U. Arunakumara and P.L. A. G. Alwis 2023. Assessment of the Shear Failure Modes of Softwood and Hardwood Timber under Different Wood Joints, J Fail. *Anal.andPreven.* Springer, https://doi.org/10.1007/s11668-023-01672-1

C.K. Muthumala, K.K.I.U. Arunakumara, Sudhira, DevSiva, P.L.A.G. Alwis, and M.J.P. Dayawansha. 2023. Shrink Index-Based Timber Classification and Finger Joint Production, *ICSBE2022-LNCE* 362, Springer nature. pte, ltd. Singapore. pp. 319-331. https://doi.org/10.1007/978-981-99-3471-3_23

C.K. Muthumala. 2023. Evaluation of the dimensional effect and relationship between density and shrinkage of Sri Lankan grown timber species , International Symposium on Agriculture and Environment 2023, University of Ruhuna, Sri Lanka, p.112.

Arachchi C. I. M., Muthumala C. K. and Jayalath J. A. C. S. 2023. Preliminary Investigation on the Effect of Termites on Wood Decay in Selected Sri Lankan Timber species, *Proceedings of the* 27th *International Forestry & Environmental Symposium-USJP. p.122*

W. V. T. D. Amarasinghe and C. K. Muthumala, 2023. Degradation of wood quality of *Eucalyptus grandis* logs exposed to the natural environment, *International Conference on Building Resilience In Tropical Agro Ecosystems,* Sri Lanka.

Muthumala C.K, Arunakumara K.K.I.U. 2023. A Key to Identify Woods of Different Eucalyptus Species, International Conference on Building Resilience In Tropical Agro Ecosystems, Sri Lanka.

Rasika S. Brahmanage, Nalin N. Wijayawardene, Chandrika M. Nanayakkara, Chaminda K. Muthumala, Siril Wijesundara, Dong Q. Dai1,& Kahandawa G.S.U, Ariyawansa, Eucalyptus leaf spot disease caused by *Coniellaeucalyptorum* in Sri Lanka, Phytotaxa, ISSN 1179-3155 (print edition), https://doi.org/10.11646/phytotaxa.

**கண்காட்சிக்கான ஒத்துழைப்பு**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் செயற்பாட்டுடன் அரிமரங்கள் மற்றும் வணிக வனச் செய்கையின் நிலையான பயன்பாட்டை ஊக்குவிப்பதில் ஈடுபட்டது. அதனால் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கண்காட்சியில் கலந்து கொள்வதன் மூலம் மக்களின் அறிவை விருத்தி செய்வதனை எதிர்பார்க்கின்றது.

1. D.S. சேனாநாயக்க வித்தியாலயம் - மீரிகம - 2023.03.03 இலிருந்து 2023.03.05 வரை
2. இலங்கை அறக்கட்டளை - 2023.01.10
3. உலக சிறுவர் தினத்துக்காக, பின்னவல மிருகக்காட்சிசாலை - 2023.09.28 இலிருந்து 2023.10.01 வரை
4. தேசிய விஞ்ஞான தினம்- தேசிய அருங்காட்சியகம் - 2023.11.08 இலிருந்து 2023.11.10



இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தின் கண்காட்சி

**தேசிய விஞ்ஞான தினத்தைக் கொண்டாடுதல் – கல்வி அமைச்சு**

2023 நவம்பர் 08 இலிருந்து 10 வரை தேசிய விஞ்ஞான தினத்தைக் கொண்டாடும் பொருட்டு கல்வி அமைச்சினால் தேசிய அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்ட கண்காட்சிக்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் செயற்பாட்டுடன் கலந்துகொண்டது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மூன்று கருப்பொருட்களின் கீழ் காட்சிக்கூடத்தை முன்வைத்தது. நிலையான வன முகாமைத்துவம், நிலையான மரப் பாவனை மற்றும் மரம் மற்றும் காலநிலை மாற்றம், இக்கருப்பொருட்களின் கீழ் வணிக வன முகாமைத்துவம், அரிமர பாதுகாப்பு நுட்பங்கள், மரத்தைத் தரப்படுத்தல் மற்றும் மரங்களை இனங்காணல், காலநிலை சீர்கேட்டுக்கு எதிராகப் போராடுவதில் மரங்களின் முக்கியத்துவத்தை அறிமுகப்படுத்தியது. பைன் மரங்கள் மற்றும் உள்நாட்டு மரப் பாவனை மற்றும் காபனை உட்செலுத்தல் பற்றிய அதன் முக்கியத்துவ மாதிரி மற்றும் புதிதாகத் தயாரிக்கப்பட்ட தளபாடங்களின் மூலமும் முன்வைக்கப்பட்டது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் கவர்ச்சிகரமான மற்றும் எழுச்சியூட்டும் அறைக்காகப் பாராட்டப்பட்டதோடு அதற்காக சான்றிதழும் கிடைத்தது.






**தேசியவிஞ்ஞானதினத்தைகொண்டாடுவதுடன் தேசியஅருங்காட்சியகத்தில் கண்காட்சி**


CERTIFICATE

NATIONAL SCIENCE DAY 2023

This certificate is awarded to

State Timber Corporation
STC

For presenting attractive & inspiring gallery at the Science Exposition on Commemorating for

National Science Exposition 2023

Organized by the

Ministry of Education

Research and Innovation Division

held on 08th, 9th & 10th November 2023

at

Department of National Museums

Colombo 07

M. N. Ranasinghe
Secretary
Ministry of Education

**வெளித் தரப்பினர்களுக்கான தொழிநுட்ப உதவி**

அரிமரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவு வெளி நிறுவனங்களுக்காக தொழிநுட்ப உதவியினை வழங்குகின்றது. உதாரணமாக, தளபாடங்களைக் கொள்வனவு செய்வதன் கொள்முதல், மரத் தளபாடங்களுக்காக விவரக் குறிப்புக்களைத் தயாரித்தல், அரிமரப் பாவனை பற்றிய ஆலோசனைகள் போன்றவையாகும். இதன்படி 2023 இல் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கீழுள்ள நிறுவனங்கள்/ நிகழ்ச்சிகளுக்கு உதவி செய்தது.

1. மூங்கில் சார்ந்த தொழிநுட்ப அறிபை பரிமாறும் நிகழ்ச்சித்திட்டம் - தொழிற்சாலை அபிவிருத்திச் சபை
2. அரிமர கலைஞர்களின் தளபாடங்களுக்கான சில நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் - NAITA வழிகாட்டல் புத்தகங்களைத் தயாரித்தல்
3. தரமான தென்னைத் துடைப்பங்களைத் தயாரிப்பதற்காக இலங்கை தர நிறுவனத்திற்கு தொழிநுட்ப உதவியை வழங்குதல்.
4. விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் தேசிய பேண்தகு உயிர்ப் பொருள் அபிவிருத்தி மூலாதாரம் பற்றிய நிகழ்ச்சித்திட்டத்துக்குக் கலந்து கொள்ளல்
5. இலங்கை சூற்றாடல் தொழிலாளர்களின் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரிமர தொழிநுட்ப மன்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்
6. பல்கலைக்கழகங்கள், வன வித்தியாலயம், தொழிற்சாலை வித்தியாலயம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்காக அரிமர தொழிநுட்ப கருத்தரங்குகளை நடாத்துதல்.





இலங்கை சூற்றாடல் தொழிலாளர்களின் நிறுவனத்தில் தொழிற்சாலை ஒருங்கிணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரிமர மன்றமொன்றுக்கு பங்குதாரரொருவராக ஒத்துழைப்பினை வழங்குதல்.





தொழிற்சாலை அபிவிருத்தி சபையுடன் ஒத்துழைப்புடன் மூங்கில் பாதுகாப்பு பற்றிய தொழிநுட்ப அறிவினைப் பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம்

**அரிமரங்களை இனங்காணல் மற்றும் அரிமர அறிக்கைகளை வெளியிடுதல்.**

உடற் கூறியல் விஞ்ஞான அம்சங்களின் மூலம் அரிமரங்களை இனங்கண்டு கொள்வதற்காக அரிமர உடற் கூறியல் அம்சங்களைப் பயன்படுத்துவதற்கு ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்துகின்றது. இச்செயன்முறையின் கீழ் வருடாந்தம் அரிமரங்களை இனங்கண்டு கொள்ளும் சான்றிதழ் மற்றும் ஏனைய அறிக்கைகள் சுமார் 150-200 அரச நிறுவனங்கள், அரசு அல்லாத நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்படும். அரிமரங்களை இனங்காண்பதற்கு மேலதிகமாக MOR, MOE, சுருக்க சோதனை, அடர்த்தி பரிசோதனை, அரிமர பாதுகாப்பு பரிசோதனை, (Boron, CCB) ஆற்றல் பன்புகள் பரிசோதனை போன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி 2023 ஆம் ஆண்டில் கீழ்வரும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 174 ஆவதோடு 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மொத்த அறிக்கைகளின் எண்ணிக்கை 214 ஆகும்.

| அறிக்கையின் விபரம் | அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| அரிமரத்தை இனங்காணல் | 100 |
| அரிமர ஈரலிப்பினை பரிசோதித்தல் | 29 |
| அரிமர அடர்த்தி பரிசோதனை | 13 |
| போரோன் பரிசோதனை | 08 |
| CCB பரிசோதனை | 02 |
| ACQ பரிசோதனை | 05 |
| அரிமரங்களின் உறுதித்தன்மை பண்பு | 17 |
| ஏனையவை (தொழிநுட்ப அறிக்கை மற்றும் களப் பயணத்தின் மூலம்) | **40** |
| மொத்தம் | **214** |



# வியாபாரப் பொழிப்பு

## வருவாய் வளர்ச்சிப் போக்கு பகுப்பாய்வு







## இலாப அதிகரிப்பு போக்கு பகுப்பாய்வு









# வியாபாரப் பொழிப்பு

## உற்பத்தி வளர்ச்சிப்போக்கு பகுப்பாய்வு


















## மூலதனச் செலவினம் – 2023

| விபரம் (ரூபா 2 மில்லியனுக்கு மேல்) | ரூபா |
|---|---|
| சங்கிலி வாள் - பிராந்திய | 31.1 |
| கணனி மற்றும் அச்சு இயந்திரம் | 8.6 |

## முதலீடு

| | 31-12-2023 | 31-12-2022 |
|---|---|---|
| அரச நிறுவனங்களில் தற்காலிக மேலதிக நிதியக் கணக்கு | 731,832,197 | 731,832,197 |
| அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி | 46,821,808 | 241.353,882 |
| நில மீட்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம் | 500,000 | 500,000 |
| மக்கள் வங்கி | 2,188,897 | 1,900,333,483 |
| இலங்கை வங்கி | 1,871,445 | 1,805,915,239 |

# தசாப்தத்தின் தகவல்கள் (முழுமையான பெறுமதிகள்)

| | | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருடத்திற்கான முழு வருமானம் | ரூபா .000 | 3,756,482 | 4,132,052 | 4,522,238 | 4,630,718 | 4,457,024 | 4,608,413 | 4,372,033 | 5,996,789 | 5,465,421 | 5,147,304 |
| வருடத்திற்கான மொத்த இலாபம் | ரூபா .000 | 1,453,450 | 1,757,115 | 2,045,090 | 2,075,950 | 1,964,647 | 1,890,812 | 1,745,766 | 2,753,682 | 2,290,975 | 1,908,909 |
| வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னைய தேறிய இலாபம் | ரூபா .000 | 427,222 | 768,699 | 659,732 | 966,804 | 672,433 | 512,947 | 569,521 | 1,496,156 | 1,015,986 | 1,273,734 |
| மொத்த ஊழியர் கிரயம் | ரூபா .000 | 1,254,516 | 1,449,749 | 1,789,572 | 1,572,775 | 1,553,598 | 1,584,418 | 1,640,020 | 1,580,855 | 1,776,363 | 1,774,507 |
| வருடாந்த மூலதனச் செலவினங்கள் | ரூபா .000 | 115,132 | 244,929 | 113,675 | 94,637 | 116,034 | 319,485 | 104,712 | 126,547 | 47,998 | 55,085 |
| ஆண்டின் இறுதியில் நடைமுறையல்லாத சொத்துக்கள் | ரூபா .000 | 1,654,908 | 1,743,580 | 1,732,640 | 1,894,597 | 1,978,855 | 2,581,165 | 1,966,637 | 2,158,971 | 2,391,511 | 2,050,668 |
| ஆண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் | ரூபா .000 | 4,004,860 | 4,115,259 | 3,652,116 | 4,423,105 | 4,541,610 | 4,640,889 | 5,319,557 | 7,048,847 | 7,196,775 | 7,512,262 |
| ஆண்டின் இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூபா .000 | 1,591,991 | 1,480,966 | 897,087 | 1,234,716 | 1,047,668 | 967,481 | 985,365 | 1,791,411 | 1,423,068 | 972,510 |
| ஆண்டின் இறுதியில் நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | ரூபா .000 | 484,649 | 424,854 | 499,373 | 852,292 | 812,441 | 714,022 | 836,197 | 659,200 | 500,063 | 583,632 |
| வருட இறுதியில் உரிமையாண்மை | ரூபா .000 | 3,583,129 | 3,953,019 | 3,988,297 | 4,230,694 | 4,660,357 | 5,540,551 | 5,464,633 | 6,757,207 | 7,665,155 | 8,006,788 |
| திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பு | ரூபா .000 | 25,000 | 50,000 | 175,000 | 100,000 | 100,000 | 50,000 | 511,026 | 100,000 | 320,000 | 649,461 |
| வருட இறுதியில் ஊழியர் எண்ணிக்கை | எண்ணிக்கை. | 2,186 | 2,145 | 2,125 | 2,083 | 2,001 | 1,803 | 1,708 | 1,606 | 1,500 | 1,390 |
| **பிரதான செயலாற்றுகை ஈட்டிகள்** | | | | | | | | | | | |
| பங்குகளுக்கு : வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 11.92 | 19.45 | 16.54 | 22.85 | 14.43 | 9.26 | 10.42 | 22.14 | 13.25 | 15.91 |
| மொத்த சொத்துக்களுக்கு நிதிச் செலவு மற்றும் வரிக்கு முன்னைய தேறிய இலாபம் | % | 7.55 | 13.12 | 12.25 | 15.30 | 10.31 | 7.10 | 7.82 | 16.25 | 10.60 | 13.32 |
| நடைமுறை விகிதம் | தடவைகள் | 2.52 | 2.78 | 4.07 | 3.58 | 4.33 | 4.80 | 5.40 | 3.93 | 5.06 | 7.72 |
| உரிமையாண்மை:சொத்து விகிதம் | தடவைகள் | 0.63 | 0.67 | 0.74 | 0.67 | 0.71 | 0.77 | 0.75 | 0.73 | 0.80 | 0.84 |
| சொத்துக்களின் மீதான இலாப விகிதம் | % | 3.64 | 6.31 | 0.66 | 3.84 | 6.59 | 12.19 | 8.00 | 6.91 | 14.04 | 12.09 |
| மொத்த வருமான வளர்ச்சி | % | 3.88 | 10.00 | 9.44 | 2.40 | (3.75) | 3.40 | (5.13) | 37.16 | (16.73) | (0.06) |

எனது இல. எப்டப்எல்/ஏ/எஸ்ரீசீ/எப்ஏ/01/2023/15 2024 யூலை 25

தலைவர்
அரச மரக் கூட்டுத்தாபனம்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 20 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1 **நிதிக்கூற்றுக்கள்**

---

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க காலக்கிரமத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

(அ) 1995 ஆம் ஆண்டின் போது ரூபா 325,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த நெலுந்தெனிய களஞ்சியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணி மற்றும் மாத்தளை, தலாவ அனுராதபுரம் மதவாச்சி, கதுருவெல மற்றும் மின்னேறிய களஞ்சியங்கள் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணி நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 1969 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண அலுவலகம் மற்றும் கெப்பட்டிபொல அலுவலகம் என்பவற்றை நடாத்திச் சென்ற கூட்டுத்தாபனத்துக்கு கையளிக்கப்பட்டு இருந்த போதும் உரித்து உறுதி ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தாமல் காணி தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு காசாக செய்யப்பட்ட ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவு ரூபா 92,567,360 ஆக இருந்த போதிலும் அது ரூபா 11,328,488 ஆக ரூபா 81,238,872 குறைத்து காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் நாளாந்த ஊழியர்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்கு முன்னராக செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் (நூீகு) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (நுவுகு) ரூபா 43,196,324 இற்காக ஒதுக்கீடு செய்யாமையால் அப்பெறுமதியினால் கூட்டுத்தாபனத்தின் உரித்து மிகை கணக்கீடு செய்யப்பட்டு பொறுப்புக்கள் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) தளபாட பிரிவுக்குரிய மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 1,770,611 தொகை ஏனைய செலவினங்கள் விரிவான வருமான கூற்றில் சீராக்கம் செய்த காரணத்தினால் அப்பெறுமதியால் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு குறைத்தும் ஏனைய செலவினம் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படு காலம் குறைந்தது ஒவ்வொரு ஆண்டிலும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வரும் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 924,994,884 பெறுமதியான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் 17 ஆம் இலக்க குறிப்பின் பிரகாரம் இலாப நட்டக் கூற்றில் இனங்காணப்பட வேண்டிய பணிக்கொடை செலவினம் ரூபா 48,160,020 ஆக இருந்த போதிலும் இலாப நட்டக் கூற்றிற்குரிய இணைந்த வருமான கூற்றில் காணப்பட்ட உள்ளவாறான பணிக்கொடை செலவினம் ரூபா 67,250,212 ஆக இருந்ததால் ரூபா 19,090,192 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் இறுதி இருப்பின் பெறுமதி கிரயம் அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட

வேண்டிய போதிலும் அம்பாறை தளபாட தொகுதியில் 36 லொட் ஏலவிற்பனை இருப்புக்களின் ரூபா 1,476,508 ஆன தேறிய நிகர பெறுமதியினை மிகைத்த ரூபா 2,467,626 ஆன கிரய பெறுமதியில் இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டமை காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் தேறிய இலாபம் ரூபா 991,118 வீதம் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,464,814 தொகை ஒன்றை இனங்காண்பதற்கு முடியாமல் இருக்கையில் முதலீட்டு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் அப் பெறுமானத்தினால் முதலீடு வருமானம் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது

(ஏ) பள்ளேகல தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு காணப்பட்ட பகுதியளவு நிறைவடைந்த பொருட்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்படாமல் அவற்றிற்குரிய நடைமுறை வேலைப் பெறுமதி மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட இருப்பு நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

---

இந்த கணக்காய்வு அறிக்கை திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்று கருத்திற் கொள்ளப்படும். இந்த ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் மேவுகை செய்யப்படாமல் இருப்பதுடன் நான் அது தொடர்பாக எவ்வித சான்றிதலொன்றோ அபிப்பிராயத்தை வெளியிடவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்குரிய எனது பொறுப்பு மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்துவதில்லை என்பதை கருத்திற் கொள்வதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கை திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் அடிப்படையில் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையான அளவில் தவறாக குறிப்பிட்டுள்ளதாக நான் தீர்மானித்தால் அவ்விடயத்தை என்னால் அறிக்கையிட வேண்டும். இது தொடர்பாக என்னால் அறிக்கையிடுவாதற்கு எதுவும் இல்லை

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடுகளையும் அறிக்கைளையும் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாக தரப்பினருடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ii)(ஈ)(iv) ஆம் பிரிவின்

தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் கீழே காட்டப்பட்டவற்றை குறிப்பிடுவதற்கு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வயின் ஆளுகை சபை உறுப்பினர் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்புபட்டுள்ளதாக

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுனான தொடர்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(3) | பண்டாரவல பிரதேசத்திற்குரிய வேலைத் தளத்திற்காக ஒப்பந்தக்காரர்களால் வைப்புச் செய்யப்பட்ட 02 ஆண்டுகளை மிகைத்திருந்த ரூபா 1,012,292 ஆன பிணை வைப்பு வைப்புத் தொகை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அதிகாரங்கள் கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும்

ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

## 3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) பள்ளேகல தொழிற்சாலையின் Dust collector இயந்திரமொன்றும் மற்றும் வன குற்றங்கள் தொடர்பான நீதிமன்றத்தில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்த 03 நடமாடும் மரம் கிளிக்கும் வாள்கள் பல ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு உட்படுத்தாமல் விளைவற்று உருக்குலைந்து செல்வதற்கு இடம் அளிக்கப்பட்டு இருந்தது.

(ஆ) தேவைப்பாடு திட்டவட்டமாக இனங் காணப்படாமல் 2023 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 35,800,075 பெறுமதியான 13 பிரதேச அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த 100 சங்கிலி வால்களில் (chain saw) 75 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவின் செயற்திறனாக பயன்பாட்டிற்காக முறையான வேலை திட்டம் ஒன்று தயாரிக்காமை காரணமாக குறைப் பயன்பாட்டில் காணப்பட்டன.

(இ) 2008 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 422 ஆம் இலக்க நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் வன குற்றங்கள் மரம் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்காமை காரணமாக வன குற்ற மரங்களை அழித்தல், மர முகாமைத்துவம் மற்றும் களஞ்சிய வசதிகள் முகாமைத்துவம் சிரமமாக இருத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு கூட்டுத்தாபனம் முகம் கொடுத்திருந்ததுடன் கண்டிப் பிரதேசத்திற்குரியதாக மாத்திரம் 159,104 கன தெசி மீட்டர் குற்றி மரங்கள் மற்றும் கிழிக்கப்பட்ட 30,933 தெசி மீட்டர் மரங்கள் சிதைவடைந்தும் களஞ்சிய இட வசதிகள் இல்லாமலுரும் இருந்தமை அவதானிக்கப்பட்டது

(ஈ) நன்கொடையாக கிடைத்த மரங்களை அகற்றுவதற்காக முறையான நடைமுறையொன்று தாபிக்கப்படாமை காரணமாக 2023 ஆம் ஆண்டின் போது 1,1:57 அகற்றலுக்காக ரூபா 41,854,672 தொகை தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வியாபார கணக்குகள் காணப்பட்ட 966,058,091 ஆன மீதியில் காணப்பட்ட ஓராண்டு முதல் நான்கு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக காலம் கடந்திருந்த ரூபா 240,299,687 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாதிருந்த 8 பதவிகளில் 23 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# வருடாந்த கணக்குகள்

## இலாப நட்ட மற்றும் விரிவான வருமானக் கூற்று டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|---|
| விற்பனைப் புரள்வு | 2 | 4,092,128,811 | 4,743,049,736 |
| விற்பனைக் கிரயம் | 3 | (2,183,219,570) | (2,452,074,230) |
| **செயற்பாடு மீதான மொத்த இலாபம்** | | **1,908,909,241** | **2,290,975,506** |
| ஏனைய வருமானங்கள் | 6 | | |
| செயற்பாட்டு | 6.3 | 95,255,751 | 33,259,919 |
| செயற்பாடற்ற | 6.1 | 14,568,317 | 14,953,721 |
| **மொத்த தேறிய வருமானம்** | | **2,018,733,309** | **2,339,189,147** |
| விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள் | 4 | (729,542,520) | (955,435,355) |
| நிர்வாகச் செலவினங்கள் | 5 | (959,724,662) | (1,039,084,313) |
| நிதிச் செலவினங்கள் | | (1,082,440) | (2,844,101) |
| நிதி வருமானங்கள் | 6.2 | 945,351,151 | 674,160,950 |
| **திறைசேரி வரிக்கு முன் தேறிய இலாபம்** | | **1,273,734,838** | **1,015,986,328** |
| | | | |
| வருடத்துக்கான வருமான வரி | 7 | (117,943,033) | (380,105,005) |
| | | | |
| திறைசேறிக்கு செலுத்திய வரி | | 1,155,791,805 | 635,881,323 |
| வருடத்துக்கான இலாபம் | | (649,461,969) | (320,000,000) |
| **வருடத்துக்கான இலாபம்** | | **506,329,836** | **315,881,323** |
| | | | |
| **ஏனைய விரிவான வருமானங்கள்** | | | |
| ஓய்வூதிய நலன் மிகை / குறை | 17 | (164,697,250) | 347,392,072 |
| | | | |
| **ஏனைய விபரமான வருமானங்கள்** | | **(164,697,250)** | **347,392,072** |
| | | | |
| **மொத்த விபரமான வருமானங்கள்** | | **341,632,586** | **663,273,395** |

# நிதி நிலைமைக் கூற்று

## டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

| | குறிப்பு | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணங்கள் | 8 | 1,155,995,376 | 1,309,685,438 |
| உரிமையுள்ள பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் (ROU) | | | |
| அருவச் சொத்துக்கள் | 9 | | 25,493 |
| உயிரியல்சார் சொத்துக்கள் | 10 | 7,735,659 | 7,735,659 |
| திறைசேரி வைப்புக்கள் | | 2,966,000 | 2,966,000 |
| பிணை வைப்புக்கள் - ஊழியர் | | 86,622,644 | 85,468,421 |
| முதலீடுகள் | 11.1 | 779,154,004 | 973,686,078 |
| முற்செலுத்தப்பட்ட ஊழியர் நலன்கள் | | | - |
| மூலதனம் நடைமுறை வேலைகள் | | 18,194,374 | 11,944,333 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **2,050,668,057** | **2,391,511,422** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| வியாபார இருப்புக்கள் | 12 | 1,789,634,929 | 1,656,987,490 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்காரர்கள் | 13 | 1,438,893,929 | 1,742,578,098 |
| நிலையான வைப்புக்களிலான முதலீடு | 11.2 | 4,060,343,525 | 3,706,248,722 |
| காசு மற்றும் வங்கி மீதி | 14 | 223,390,474 | 90,961,043 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 7,512,262,857 | 7,196,775,353 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **9,562,930,913** | **9,588,286,776** |
| | | | |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **உரிமையாண்மையும் ஒதுக்கங்களும்** | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | 75,000,000 | 75,000,000 |
| | | | |
| மூலதனம் பங்களிப்புக்கள் | 15 | 41,503,668 | 41,503,668 |
| வருமான ஒதுக்கங்கள் | | 7,452,729,690 | 7,129,558,552 |
| | | 7,494,233,358 | 7,171,062,220 |
| ஊழியர் கடன் சுழற்சி நிதியம் | 16 | 512,554,753 | 494,093,306 |
| **மொத்த உரிமையாண்மை** | | **8,006,788,112** | **7,665,155,526** |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடு | 17 | 406,440,553 | 253,071,791 |
| பிணை வைப்புக்கள்- ஊழியர் | | 86,623,394 | 85,468,421 |
| குத்தகைப் பொறுப்பு- செயற்பாடு | | 3,655,778 | |
| வட்டியை ஏற்கும் பொறுப்பு | 21 | 86,912,496 | 7,677,248 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 7.2 | | 153,845,554 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | **583,632,222** | **500,063,014** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வருமான வரி | 18 | 24,375,301 | 109,777,488 |
| வட்டியை ஏற்கும் பொறுப்பு | 21 | 3,520,107 | 5,043,288 |
| கடன் உரிமையாளர்களும் திரட்டப்பட்ட செலவுகளும் | 19 | 944,615,173 | 1,308,247,460 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **972,510,580** | **1,423,068,236** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,556,142,801** | **1,923,131,250** |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **9,562,930,913** | **9,588,286,776** |

1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டப் பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான இக்கூற்று முன்வைக்கப்பட்டுள்ளது.

**பொது முகாமையாளர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**பிரதி பொது முகாமையாளர் (நிதி)**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

பக்க இல 154 முதல் 161 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இல 153 முதல் 154 வரையிலான குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களின் ஓர் பகுதியாகும். இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் மற்றும் முன்வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியது இந்நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது

**தலைவர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

Nishant Edirs

**பணிப்பாளர்**
திகதி: 07.03.2024

# உரிமையாண்மை மாற்றக் கூற்று

## டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

| | பங்களித்த மூலதனம் ரூபா | ஊழியர் கடன் சுழற்சியும் நிதியம் ரூபா | வருவாய் ஒதுக்கங்கள் ரூபா | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| **2022 ஜனவரி 1 ஆம் திகதியில் மீதி2** | 41,503,668 | 433,020,533 | 5,829,576,396 | 453,106,621 | **6,757,207,218** |
| | | | | | |
| வருடத்தினுள் நிதிய மாற்றல்கள் | | 50,000,000 | (50,000,000) | | |
| | | | | | |
| இருப்பு அழிதல்களுக்கான மாற்றங்கள் | | | 244,674,912 | | **244,674,912** |
| | | | | | |
| வருடத்துக்கான இலாபம் | | | 315,881,323 | | **315,881,323** |
| | | | | | |
| ஊழியர் கடன் வட்டி | | 11,072,773 | (11,072,773) | | **-** |
| | | | | | |
| மீண்டும் கணக்கிடப்பட்ட மீதிகளை மாற்றீடு செய்தல் | | | 3,700,000 | (3,700,000) | |
| | | | | | |
| ஏனைய விபரமான வருமானங்கள் | | | 347,392,072 | | **347,392,072** |
| | | | | | |
| **2023 ஜனவரி 1 ஆம் திகதியில் மீதி** | **41,503,668** | **494,093,306** | **6,680,151,930** | **449,406,621** | **7,665,155,526** |
| | | | | | |
| வருடத்தினுள் நிதிய மாற்றல்கள் | | | - | | **-** |
| | | | | | |
| இருப்பு அழிதல்களுக்கான மாற்றங்கள் | | | | | **-** |
| | | | | | |
| வருடத்திற்கான இலாபம் | | | 506,329,836 | | **506,329,836** |
| | | | | | |
| ஊழியர் கடன் வட்டி சீராக்கல்கள் | | 18,461,447 | (18,461,447) | | |
| | | | | | |
| மீண்டும் கணக்கிடப்பட்ட மீதிகளை மாற்றீடு செய்தல் | | | | | |
| | | | | | |
| ஏனைய விபரமான வருமானங்கள் | | - | (164,697,250) | | **(164,697,250)** |
| | | | | | |
| **2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் மீதி** | **41,503,668** | **512,554,753** | **7,003,323,069** | **449,406,621** | **8,006,788,113** |

# காசுப் பாய்ச்சல் கூற்று
## டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

| | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் காசுப்பாய்ச்சல் | | |
| வாடிக்கையாளர்களிடமிருந்து காசுப் பெறுவனவுகள் | 4,064,517,097 | 5,107,850,448 |
| வழங்குனர்கள் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்திய காசு | (4,084,101,538) | (5,114,966,968) |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிருந்தான காசுப்பாய்ச்சல்** | **(19,584,441)** | **(7,116,520)** |
| வருமான வரி | (270,278,278) | (328,192,410) |
| திறைசேறிக்கு செலுத்தப்பட்ட விசேட வரி | (640,766,036) | (320,000,000) |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசு** | **(930,628,755)** | **(655,308,930)** |
| | | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் | (54,647,451) | (47,998,119) |
| உயிரியல் சொத்துக்கள் அபிவிருத்தி | 3,591,344.00 | - |
| முதலீடுகள் | (159,562,728) | 334,577,909 |
| முதலீடுகளிலிருந்தான வருமானம் | 1,294,205,736 | 244,506,151 |
| சொத்துக்கள் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானம் | 305,148 | 10,718,802 |
| நடைமுறை வேலைகள் | (6,250,041) | (4,526,949) |
| ஊழியர் கடன்களை வழங்குதல் | (176,411,991) | (159,157,899) |
| ஊழியர் கடன்களை அறவிடுதல் | 168,455,259 | 130,930,240 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **1,069,685,276** | **509,050,135** |
| | | |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| | | |
| வட்டியுடனான கடன்கள் மற்றும் கடன்களிலிருந்து பெறப்பட்ட காசு | (6,627,091) | (7,083,509) |
| | | |
| **நிதிப் பயன்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்** | **(6,627,091)** | **(7,083,509)** |
| | | |
| **காசு மற்றும் அதற்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு/ குறைப்பு** | **132,429,431** | **(153,342,305)** |
| | | |
| **வருட ஆரம்பத்தில் காசு மற்றும் அதற்குச் சமான சொத்துக்கள்(குறிப்பு 14)** | **90,961,043** | **244,303,348** |
| | | |
| **வருட இறுதியில் காசு மற்றும் அதற்குச் சமான சொத்துக்கள் (குறிப்பு 14)** | **132,429,431** | **(153,342,305)** |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
# 2023 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

1.1.1 தாபித்தல்

1957 இலக்கம் 49 உடைய அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ்,1968 ஏப்ரல் மாதத்தில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஒரு கூட்டுத்தாபனமாக தாபிக்கப்பட்டது.

1.1.2 நிதிக் கூற்றுக்களுக்காக அங்கீகாரம் கிடைத்த திகதி

2024 மார்ச் மாதம் 07 ஆம் திகதி பணிப்பாளர் சபையில் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் 2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

1.1.3 ஊழியர் எண்ணிக்கை

2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 1,390 ஆகும். (2022 - 1,500 ஆகும்)

1.1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகிய பொறுப்புக்கள் பணிப்பாளர் சபைக்கு உரியது.

1.2 முன்வைத்தல் அடிப்படை

1.2.1 இணக்கம் தொடர்பான கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்) ஆகியவற்றுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் அக்கால எல்லைக்குள் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்குகளுக்கான குற்றிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.2 மதிப்பிடும் அடிப்படை

கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் மற்றும் வியாபார கடன்பட்டோர் நியாயமான பெறுமானத்திற்கு கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதோடு அவற்றைத் தவிர ஏனைய பெறுமானங்கள் நிதிக் கூற்றுக்களில் வரலாற்றுக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு காட்டப்பட்டுள்ளன.

1.2.3 பயன்படுத்தப்படுகின்ற மற்றும் நிதிக் கூற்றுக்களை முன்வைக்கின்ற பண அலகு

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, அது கூட்டுத்தாபனத்தில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படுகின்ற பண அலகாகும். விசேடமாகக் குறிப்பிடப்படாது விடின், அனைத்து நிதித் தகவல்களும் மிகக் கிட்டிய ரூபா பெறுமதியைப் பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன.

1.2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பயன்

இலங்கை கணக்காய்வு தரங்களின்படி நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது முகாமைத்துவத்துக்கு பல்வேறு மதிப்பீடுகள், தீர்மானங்கள் மற்றும் ஊகங்களை அடிப்படையாகக் கொள்வதற்கு ஏற்படுவதோடு, அவை கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் போது மற்றும் அறிக்கையிடும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்களின் பெறுமதியில் தாக்கத்தினை ஏற்படுத்தும். மதிப்பீடு மற்றும்

அடிப்படை ஊகங்கள் என்பன முன்னைய அனுபவங்கள் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பங்களின் கீழ் நியாயமானது என நம்பும் ஏனைய விடயங்களின் அடிப்படையில் உள்ளன. உண்மைப் பெறுபேறுகள், மதிப்பீட்டு ஊகங்கள் மற்றும் தீர்மானங்களை விடவும் மாறுபட முடியும். மதிப்பீடுகளும் அனுமானங்களும் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன. சீர்திருத்தப்படுகின்ற கணக்காய்வு மதிப்பீடுகள் அம்மதிப்பீடுகள் சீர்திருத்தப்பட்ட காலப்பகுதிக்கும் அவை தாக்கம் செலுத்துகின்ற எதிர்காலப் பகுதிக்கு சீராக்கம் செய்யப்படும்.

**1.2.5 அந்நியச் செலாவணி பரிமாற்றங்கள்**

வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் இலங்கை ரூபாவிற்குப் பரிவர்த்தனை செய்யப்படுவது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற நாளில் இருக்கும் நாணயப் பெறுமதியின் அடிப்படையிலேயாகும்.

**1.2.6 வரி அறவிடல்**

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள் மற்றும் செலவினங்களின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ள 2006 இலக்க 10 உடையதும் 2017 இலக்க 24 உடையதுமான உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரமாணங்கள் மற்றும் பிற்காலத்தில் திருத்தங்களுக்கும் அமைவாக கணக்கிடப்பட்டதன் பின்னர் வருமான வரிக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் உரிய கணக்கீட்டு காலப்பகுதியினுள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.**

**1.3.1 சொத்துக்கள் மற்றும் பெறுமதி கணக்கீட்டு அடிப்படை**

**1.3.1.1 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

**1.3.1.1.1 இனங்காணும் அடிப்படை**

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் உருப்படிகள் திரண்ட தேய்மானத்தையும் மற்றும் சேதத்துக்குள்ளான பெறுமதி இழப்பினையும் கழித்து கிரயத்தில் குறிக்கப்படும். (காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக நியாயமான பெறுமதி அடிப்டையில் * சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது அதற்கு நேரடியாக ஏற்பட்ட செலவினங்கள் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பிரத்தியேகமான உருப்படிகளாகக் கணக்கு வைக்கப்படும். அனைத்து சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் முதலில் செலவினமாக இனங்காணப்படும்.

**1.3.1.1.2 மீள் மதிப்பீடு மாதிரி**

மீள் மதிப்பீடுகள் முறைப்படி மேற்கொள்ளப்படுவதுடன், அது கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் ஆண்டிறுதியில் நியாயமான பெறுமதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதனால் கொள்வனவு பெறுமதியை விட மதிப்பீட்டுப் பெறுமதி மாறுபடாது.

மோட்டார் வாகனம் (மோட்டார் சைக்கிள் * மீள் மதிப்பீட்டின் போது அவற்றின் நியாயமான பெறுமதி மீள் மதிப்பீட்டின் பெறுமதியுடன் தொடர்ச்சியாகத் தயாரிக்கப்படுகின்றது. அன்றைய நாளில் காணப்படும் முழுத் தேய்மானத்தின் பெறுமதி மொத்த நியாயமான பெறுமதி மற்றும் சேதம் ஏற்படத்தும் இழப்பு சரி செய்யப்பட்டதன் பின்னர் நியாயமான பெறுமதி எனும் இரண்டினதும் வேறுபாட்டிற்கு சமமான முறையில் சரி செய்யப்படும்.

மீள் மதிப்பீட்டின் பெறுபேறு ஒன்றாக சொத்துக்களின் நியாயமான பெறுமதியில் அதிகரிப்பொன்று ஏனைய நீட்டிப்பு வருமானங்களின் கீழ் இனங்காணப்பட்டதுடன், அது உரிமையாண்மையில் மறு மதிப்பீட்டு பெறுமதியுடன் கூட்டப்படும். முன்னர்

மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் குறிப்பிடப்பட்ட அந்த சொத்தில் மறு மதிப்பீட்டு பெறுமதி குறைவதும், மீண்டும் திருப்புவதற்குள்ள திறனின் அளவின் மேல் இந்த அதிகரித்தல் இலாபம்/ நட்டத்தில் இனங்காணப்படும்.

மீள் மதிப்பீட்டின் பெறுபேறாக சொத்துக்களில் நியாயமான மதிப்பில் குறைவொன்று நடப்பு ஆண்டில் இலாபத்தில்/ நட்டத்தில் இனங்காணப்படும். இக்குறைதல், அச்சொத்துக்குரிய மறு மதிப்பீட்டுப் பெறுமதியில் காணப்படும் செலவு மீதி வேறுபாடுகளின் அடிப்படையில் ஏனைய நீட்டிப்பு வருமானமாக இனங்காணப்படும்.

மோட்டார் வாகன சொத்தை அடையாளம் காணும் போது அது தொடர்பான மீள் மதிப்பீட்டுப் பெறுமதி நேரடியாக நிறுத்தி வைத்த வருமானத்துக்கு மாற்றப்படும்.

**1.3.1.1.3 சொத்துக்கள் விற்பனை மீதான இலாபங்கள் / நட்டங்கள்**

சொத்துக்கள் விற்பனை மீதான மீதான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் (தேறிய விற்பனையின் போது பெறுவனவு சொத்துக்களின் முகப்பு பெறுமதி வித்தியாசமாகக் கணக்கிடப்பட்ட * சொத்துக்கள் விற்பனை செய்யும் ஆண்டில் வருமானக் கூற்றுக்களில் ஏனைய வருமானங்கள்/ செலவினங்களின் கீழ் காண்பிக்கப்படும்.

**1.3.1.1.4 பின்தொடரும் கிரயங்கள்**

நிலையான தன்மையுடைய வியாபாரமொன்றை நடத்திச் செல்வதற்கு அல்லது வியாபாரத்தின் இயலளவினை அதிகரிப்பதற்காக செலவாகும் பிற்போடப்பட்ட செலவினம் மூலதனச் செலவினமாக கருதப்படுவதுடன், அவ்வாறான செலவினங்கள் முன்கொண்டு வரப்படும் பெறுமதியிலிருந்து இனங்காணப்படும். அவ்வாறே ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் அவ்வப்போதான பராமரித்தல் செலவுகள் வருமானம் உழைப்பதற்கு ஏற்பட்ட செலவாக இனங்காணப்படும்.

**1.3.1.1.5 அகற்றுதல்**

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை அகற்றுகையில் அல்லது அதன் பாவனையில் எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது அவற்றை முன்கொண்டு வருவது நிறுத்தப்படும். இவ்வாறு சொத்துக்களை அகற்றும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் விரிவான வருமானக் கூற்றில் சீராக்கம் செய்யப்படுவதுடன் இலாபம் வருமானமொன்றாக கருதப்பட மாட்டாது.

**1.3.1.1.6 பெறுமானத் தேய்வு**

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலம் முழுவதும் நேர்கோட்டு அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் பெறுமானத் தேய்வு கழிக்கப்படும். இறையில் காணி தேய்மானத்துக்கு உட்படாது. உரிய வீதங்கள் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| நிலையான கட்டடங்கள் | 2.5% |
| பகுதி நிலையான கட்டடங்கள் | 30% |
| இயந்திர உபகரணங்கள் | 10% |
| வாகனங்கள் | 20% |
| பாதைகள் மற்றும் புகையிரதப் பாதைகள் | 5% |
| குத்தகை நிலங்கள் | 5% |
| பாதைகள் அமைத்தல் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| பல்வேறு சொத்துக்கள் | 20% |
| கணினிகள் | 20% |
| மின் உபகரணங்கள் | 10% |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 20% |
| காணி அபிவிருத்தி | 10% |

### 1.3.1.2 பூர்த்தியடையாத மூலதன வேலைகள்

நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் பூர்த்தி செய்யப்படாத வருடத்தினுள் ஏற்பட்ட மூலதனச் செலவினங்கள் முடிவுறா மூலதன வேலைகள் எனக் காட்டப்பட்டுள்ளதுடன், வருடத்தினுள் வேலை பூர்த்தியாகி பாவனைக்குப் பொருத்தமான நிலைக்கு வந்ததன் பின்னர் அவை சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ்க் காட்டப்படும்.

### 1.3.1.3 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துக்களில் கணினி மென்பொருள் கொள்வனவுக்காக ஏற்பட்ட செலவுகளைய முழுமையாகக் கொண்டுள்ள அருவச் சொத்தொன்று அதன் கிரயத்தை நம்பகமாக முறையில் கணிப்பிட முடியமாயின் மற்றும் அதன் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கும் சாத்தியம் காணப்படும் எனின் மாத்திரமே இனங்காணப்படும். அருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து நீண்ட தேய்மானத்தையும் சேதத்துக்குள்ளான திரண்ட பெறுமதியையும் கழித்து கணிப்பிடப்பட்டுள்ளன. விசேடமான சொத்துக்குரியதாக பின்னர் மேற்கொள்ளப்பட்ட செலவு அதன் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கும் போது மாத்திரமே மூலதனமாக்கப்படும். தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்டு ஐந்து வருட ஆயுட்காலம் முழுவதும் வெட்டப்படுகின்றது.

### 1.3.1.4 உயிரியல் சார் சொத்துக்கள்

“உயிரியல் சார் சொத்துக்கள்" முதிர்ந்த உயிரியல் சார் சொத்துக்கள் விளைச்சலை அறுவடை செய்யும் மட்டத்தில் காணப்படுபவை அல்லது எப்போதும் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளும் நிலைமையில் இருப்பவையே முதிர்ந்த உயிரியல் சார் சொத்துக்கள் எனப்படுகின்றன. விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடிந்த நிலைமையை அடையாமல் இருப்பவை முதிர்ச்சியற்ற உயிரியல் சார் சொத்துக்கள் எனப்படுகின்றன.

